அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் மனம்- 10 ஜனவரி - பெப்ரவரி 2022 திருவள்ளுவர் ஆண்டு 2053











தக்கார் தகவிலர் என்ப தவரவர் எச்சத்தாற் காணப் படும்


- “றோ” வும் தமிழரின் உரிமைப் போரும்
- தமிழர் பாரம்பரிய மரபுத் திங்கள்
- பெரு நாட்டில் ஒரு விடுதலைப் போராட்டம்
- மார்கரெட் ட்ராவிக்

# சூரியப் பொங்கல்

காலமொன்றிருந்தது..
வண்டி மாடு பூட்டி உழவு செய்து
பசுந்தாள் பசளையிட்டு
வரிசையாய் வயலில் நின்று
நடவு நட்டு... களையெடுத்து...
மகிழ்ந்திருந்த
காலமொன்றிருந்தது!

சுட்டெரிக்கும் வெயில்
கொட்டுகின்ற மழை
பயிர்க் குழந்தைகளுக்கு
பங்கம் தருமோ  என்ற
சிந்தனை மட்டுமே
சித்தத்தில் இருக்கும்.
காலைப் பொழுதுகளில்
பச்சைப் பசேலென்று
தலையாட்டி வரவேற்கும்
விளை நிலம்.
அன்றைய பொழுதெல்லாம்
சந்தோசம் நிறைந்திருக்கும்.

அறுவடை
வீடு தேடிவரும்
அன்றைய பொழுது..
அப்பப்பா...!!
சூரியப் பொங்கலிட்டு
மனமுருகிப் படையலிட..
பட்ட கஷ்டமெல்லாம்
பறந்து போகும்.
ஊர் கூடிக் கொண்டாடி
விழாவெடுத்து மகிழ்ந்திருந்த
காலமொன்றிருந்தது...!!

இப்போதும்..
அதே சுட்டெரிக்கும் சுக்கிரன்..
அதே படையல்..
ஆனால்,
கண்ணீரால் கரித்துப் போன
பொங்கலில்
இனிப்பு மட்டும்
தொலைந்து போனது.

பக்கத்துக் காணிக்காரன்
காணாமல் போய் கனகாலம்..
வீட்டிலிருந்தே
பிடித்துப் போனார்களாம்..!

கண்ணீரில் கரைந்து.. காத்திருந்து..
முதிர் தாய்
மூச்சை விட்டு விட்டாள்.
இளம் மனைவி... பாவம்..
தேடியலைவதில்
இளமையைத் தொலைக்கிறாள்.
நண்டும் சிண்டுமாக
குழந்தைகள்
நாதியற்றுக் கிடக்கின்றன.

இது ஒரு கதை.
ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு வதை...
ஊரிலிருந்த பலபேரைக்
காணவில்லை... என்ற
துக்கம் மட்டும்
தொண்டைக் குழிவரை..!!!

மேற்குப் பக்கக் காணிநிலம்
இது நாள்வரை மூடியே கிடந்தது.
அகழ்வு வேலை நிறைவுற்றதாம்
இப்போ.. அங்கு ஒரு விகாரை..
ஆலய மணி
அடக்கமாக ஒலிக்க
'பிரித்' ஓதலுடன்
விடிகிறது எங்கள் ஊர்.


தெரிந்த முகங்கள்
தொலைந்து போனது
அந்நியர்
எங்களுக்கு அடுத்த வீட்டில்..
கேட்டால்..
அயலவராம்.

வரண்டு போன
விளைநிலம்!
வீடு வராத
அறுவடை!
கனத்துப் போன இதயங்கள்!
கடை அரிசியில்
சூரியப் பொங்கல்...!!!
மறுபடியும் ஒரு தைமகள்!
வழமைபோல...
விடியலுக்காக
காத்திருக்கும் நாங்கள்!!



\- விழி

# உள்ளடக்கம்....


| | | பக்கம் |
|---|---|---|
| ஆசிரியர் கருத்து | | 03 |
| தாழ்ந்து போகும் தமிழர் நிலை |  | 04 |
| அத்திவாரக்கல் மேஜர் சோதியா |  | 06 |
| கேணல் கிட்டு - தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர் |  | 08 |
| உன்னதமான போராளி - கப்டன் பண்டிதர் |  | 12 |
| காற்றோடு காற்றான எங்கள் பொன்னம்மான் |  | 16 |
| “றோ” வும் தமிழரின் உரிமைப் போரும் |  | 22 |
| நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் |  | 34 |
| பெரு நாட்டில் ஒரு விடுதலைப் போராட்டம் |  | 38 |
| சிறுகதை - எல்லாமே மாறிப் போச்சு |  | 40 |



எழுநிலம்

Ezhunilam

எழுநிலம்


ஜனவரி-பெப்ரவரி 2022



தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com


**திருக்குறள்**



குறள் 114:
தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்

விளக்க உரை:
நடுவுநிலைமை உடையவர் நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

# அக்கறை உறவுகள்




மணம் 9 வாசித்தேன். அட்டைப்படம் அருமையாக வந்திருக்கிறது. அதற்கு அமைவாக ஒரு கவிதை. நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப வலியுறுத்த வேண்டி யிருப்பது தமிழனைப் பிடித்த சாபமோ?

–திருச்செல்வம்
ரொறன்ரோ

இந்தியாவும் சீனாவும் எங்கள் பூமியில் சுதந்திரமாக நடமாடுவதைப் பார்க்க இரத்தக் கண்ணீர் வருகிறது. அந்நியர் காலடி படாமல் எப்படிக் கட்டிக் காத்தோம்? கட்டுரைகள், சிறுகதை, கவிதைகள் எப்போதும் போல நன்று.

–சுந்தரமூர்த்தி
மெல்பேர்ண்.

ஆரியகுளம் மட்டுமா பறிபோகிறது? பதவிக்கும் பகட்டு–க்கும் இரையானவர்கள் தமிழ்த் தலைமைகளாக இருக்கும் வரை தமிழனின் நிலம் தாரை வார்க்கப்பட–த்தான் போகிறது. போர்க்கால இதழ்கள் பயனுள்ள கட்டுரை. மொத்தத்தில் பத்திரிகை நன்றாக இருக் கிறது.

–ரதிதேவி
லண்டன்

அஜந்தியின் சிறுகதை யதார்த்தத்தை எடுத்துச் சொல் கிறது. மிகவும் எளிமையாக, அழகாகச் சொல்லியி ருக்கிறார். வாழ்த்துக்கள். பத்திரிகை பிரம்மாதமாக இருக்கிறது.

–விக்னேஸ்வரி
ஜேர்மனி.

பத்திரிகையைத் தொடர்ந்து வாசிக்கிறேன். ஆச்சரி யமாக இருக்கிறது. இந்தியப் பத்திரிகைகளுக்கு இணையாக நல்ல தரத்துடன் இருக்கிறது. மாவீரர்கள் வரலாறு நெஞ்சைத் தொடுகிறது. எத்தனை ஆளுமை–களை ஈழமண் இழந்து நிற்கிறது என்பது வேதனை–க்குரியது. பத்திரிகை மேன் மேலும் மெருகேற எங்கள் வாழ்த்துகள்.

–செங்குட்டுவன் குடும்பத்தினர்.
வேளச்சேரி, தமிழ்நாடு.

'வரலாற்றில் ஒருநாள்' மிகவும் நன்று. தேசியத் தலைவர் பற்றி அறிய அறிய அது நீண்டுகொண்டே போகிறது. அவர் ஒரு இதிகாச நாயகன் என்–பதை ஒவ்வொரு சின்னச் சம்பவ–மும் உறுதிப்படுத்துகிறது. எப்பேர்ப்பட்ட மனிதன் அவர் என்பது பிரமிப்பூட்டுகி றது. அவர் கட்டிக் காத்த மண்ணில் யார்யாரோ வேலைத்திட்டம் என்ற பெயரில் கால் வைத்திருப்பது வேதனை.

–ஞானகலாசெல்வி
நீஸ், பிரான்ஸ்.

இங்கு நிலைமை கவலையளிப்பதாக உள்ளது. உண்மை வெளிவருவதேயில்லை. யாரும் யதார்த்தத்தை கதை க்க பயப்படுகின்றனர். நீங்கள் நடப்பை சரியாகச் சொல்கிறீர்கள் என்பது எனது கணிப்பு. தயவு செய்து தொடர்ந்து எழுதுங்கள். உண்மைகளை உரக்கச் சொல் லுங்கள். எங்களுக்கு மிகவும் பிடித்த பத்திரிகை.

–தமிழன்
தாயகம்

பெண்களால் நிர்வகிக்கப்படும் பத்திரிகையில் பெண்களுக்கான வேலைத்திட்டங்களோ அல்லது அவர்களின் பிரச்சனைகளை வெளிக் கொணர்வதை–யோ பெருமளவில் காண முடியவில்லை என்பது பெரிய குறை. தயவு செய்து கவனத்தில் எடுங்கள். நாட்டு நடப்புகள், கதை, கவிதைகள் நன்று. மேலும் வளர வாழ்த்துகள்.

–சிவராணி
சுவிஸ்

கட்டுரைகள், கதை, கவிதைகள்.... என்று சகல ஆக்கங்களின் தரமும் என்னைப் பிரமிக்க வைக்கி ன்றது. எம்மாலும் முடியும் என்ற மனத்திடத்துடன் பணியாற்றும் சகோதரிகளுக்கு எனது வாழ்த்துக்கள்.

–பிரியா
நோர்வே

# இலங்கையின் அரசியல் ஆடுகளத்தில் தமிழர்கள்

## ஆசிரியர் பக்கம்

கோத்தபாயவின் அண்மைய 'கொள்கைப் பிரகடன உரை' தமிழர்களை தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. இது எதிர்பார்க்கப்பட்டது தான். மண்ணின் பூர்வ குடிகளை இல்லா தொழித்து, மண்ணைத் தனிச் சிங்கள நாடாக்க தசாப்தங்களாக திட்டமிட்டு இயங்கும் சிங்களம் வேறு எப்படி இருக்கும்? அடுத்த கட்டமாக, திறந்த மனதுடன் பேச, இரு கரங்களையும் தமிழர்களை நோக்கி நீட்டியிருக்கிறார் கோத்தபாய. நம்புங்கள். இதுவும் முன்பே திட்டமிட்டதுதான். திரும்பிப் பாருங்கள் – வரலாறு ஒரு சக்கரம் போன்றது, சுழன்று மறுபடியும் பழைய இடத்திற்கே வரப் போகிறது.

உப்புச் சப்புப் பெறாத 13ம் திருத்தச் சட்டத்தை இந்தியா வந்து, அழுத்தம் கொடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மன்றாட்டத்தை வேண்டுகோளாக வடித்து, நல்லநாள் பார்த்து இந்தியத் தூதுவரிடம் கையளித்திருக்கின்றார் ஐயா சம்பந்தன். பகீரதப் பிரயத்தனத்தின் பின், இம்முறை கூட்டமைப்பினர் உண்மையாகவே கூடிக் கையெழுத்திட்டது வரவேற்கத் தக்கதுதான். எதுவுமில்லாத 13ம் திருத்தச் சட்டம் எப்படித் தீர்வாக முடியும் – இதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கஜேந்திரகுமார் தரப்பும், 'ஐயையோ, இது தீர்வில்லை, ஒரு ஆரம்பம்தான்' என்று சம்பந்தன் ஐயா தரப்பும் இப்போதே குடுமிப்பிடி சண்டை. யாரிடம் உதவி கேட்பதாக இருந்தாலும், 13 வேண்டும், சமஷ்டி வேண்டும், அதற்கு மேலான தீர்வு வேண்டும் என்பவர்கள் தமிழர்களுக்கான ஒரு சரியான பொறி முறை இல்லாமல், ஒற்றையாட்சியின் கீழேயே நின்று கூக்குரலிடுகிறார்கள். ஐ.நா வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'சிறுபான்மை இனங்களின் பாரம்பரிய தாயகம்' என்ற கோட்பாடுகூட இங்கு ஞாபகத்தில் கொள்ளப்படுவதில்லை.

தமிழர் தரப்பின் அனுமதியின்றி, அவர்களின் அபிலாசைகளை கேட்காமல் இரு நாடுகள் செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதுதான் 13ம் திருத்தச் சட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட ஒரு நாட்டின் சட்டங்களினுள் திருத்தச் சட்டமாக இணைக்கப்படுவது எங்கும் நடைபெறாத ஒன்று. ஒரு நாட்டின் சட்டத்தினுள் இன்னொரு நாடு மூக்கை நுழைக்க முடியாது என்பது இலங்கை, இந்தியா மட்டுமல்லாமல் சட்ட வல்லுனர்களான எங்கள் தமிழ்த் தலைமைகளுக்கும் தெரியாதா என்ன? இதனால் தான் 35 வருடங்களாகியும் இந்தியா எந்தத் தலையீடும் செய்யவில்லை. ஆரம்பத்திலிருந்தே, தமிழர்க்கு உதவி செய்வதாக நம்ப வைத்து, சிங்களத்தின் பக்கம் நிற்பது தான் இந்தியா என்பது வரலாறு. தமிழர்க்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்பதில் வெளிப்படையாக இருக்கும் சிறிலங்கா பேசக் கூப்பிட்டு வாரி வழங்கப் போகிறதா என்ன?

ஆக, கடிதம் கையளிக்கப்பட்டு விட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைமைகள் டில்லி புறப்படத் தயாராகி விட்டார்கள். அங்கு மோடியுடன் தேநீர் விருந்து, பேச்சுவார்த்தை, கைகுலுக்கிக் கொண்டனர் என்பன போன்ற படங்களும் பேட்டிகளும் பத்திரிகைகளில் வரும். பின்னர் ஒரு இந்திய உயரதிகாரி சிறிலங்கா வந்து இரகசியப்பேச்சு, பேட்டி, படங்கள் என்று தொடரும். சிலசமயம், வருபவர் தமிழர் தாயகத்திற்கு ஒரு விஜயம் மேற்கொண்டு அனுதாபமாக நான்கு வார்த்தைகள் பேசக்கூடும், வழமை போல, பயந்தது போல சிறிலங்கா 'பம்மும்.'

நல்லமுடிவிற்காக தமிழ்த் தரப்பு காத்திருக்க, புலம் பெயர் தேசங்களில் தமிழர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவர். திட்டமிட்டபடி, சிறிலங்காவின் 'திட்டம் பெக்கான்' தீவிரமாக்கப்பட்டு கரையோரப் பிரதேசங்கள் சிங்கள கிராமங்களாகும். இந்தியா வழமைபோல நடுவராகவே இருக்கும். நாளாந்த வாழ்க்கையை நகர்த்த சிரமப்படும் எங்கள் மக்களின் நிலை..? சம்பந்தன் ஐயா பேட்டியில் குறிப்பிட்டது சரி தான். 'நான் எதையும் குழப்பப் போவதில்லை'. அவர் கோத்தாவின் பேசுவதற்கான அழைப்பிற்கு பதிலாக சொன்னாலும் அது தமிழர்களின் தலைவிதியுடன் ஒத்துப் போகிறதல்லவா? சரியான பொறிமுறையுடன் வலுவான தலைமைத்துவத்தை நாங்கள் தேர்ந்தெடுக்கும் வரை இது தொடரத்தான் போகிறது.

# தாழ்ந்து போகும் தமிழர் நிலைமையும்

# தமிழ் அரசியற் கட்சிகளும்



13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன், ஆறு தமிழ் அரசியற் கட்சிகள் கூட்டாகக் கையொப்பமிட்ட கடிதம், 18.01.22 அன்று, அட்டமி இல்லாத நல்ல நாளாகப் பார்த்து, சம்பந்தர் தலைமையில் கையளிக்கப்பட்டிருக்கிறது. சிறிலங்காவுக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே இதனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். சொல்லி வைத்தது போல அல்லது சொல்லி அடித்தது போல, கோத்தபாயவின் சிம்மாசன உரையும் அன்றே அரங்கேறியிருக்கிறது. எதிர்பார்த்தது போல, தமிழர்களைப் பற்றியோ அவர்களின் பிரச்சனை பற்றியோ மறந்தும் தொடவில்லை கோத்தபாய.

13ம் திருத்தச் சட்டம் ஒரு தீர்வல்ல, தீர்வுக்கான முதல் முயற்சி என்றும் கடிதத்தில் வேறு கோரிக்கைகளும் இருக்கின்றன என்றும் கூட்டமைப்பினர் பீலா விட்டுக் கொண்டிருக்க, சமஷ்டி வேண்டும் - அதற்கும் மேலான ஒன்று வேண்டும் என்று கஜேந்திரகுமார் தரப்பிலிருந்து பிரசாரங்கள் கிளம்ப, மக்கள் எதைப்பற்றியும் கவலைப்பட்டு எதுவும் ஆகிவிடப் போவதில்லை என்று தம்பாட்டில் இருக்கிறார்கள். உண்மையில் மக்கள் மயப்படுத்தப்படாத இந்த இரு தரப்பிற்கும் இடையில் பெரிய வேறுபாடு எதுவுமில்லை. இவர்கள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதுமில்லை. இதுவரை கால நீண்ட போராட்ட வரலாறு, தியாகங்கள், சுயமான தற்சார்பு வாழ்க்கை

முறை அத்தனையும் மறந்த அல்லது மறக்கடிக்கப் பட்ட மக்களிடம் இப்போதைய அரசியல் நிலைமை பற்றி எந்தத் தெளிவுமில்லை, எதிர்பார்ப்புமில்லை. சிறிலங்கா அரசும் அதன் சார்பு சக்திகளும் திட்டமிட்டு மக்களின் சிந்தனையை மழுங்கடித்து வருகிறார்கள். தமிழ்க் கட்சிகளோ எந்த விதமான அடிப்படைக் கொள்கைத் திட்டங்களுமின்றி, மக்களைச் சென்றடையாத ஒரு அரசியலை தேர்தலை மட்டுமே குறியாகக் கொண்டு செய்து வருகிறார்கள்.

புத்திஜீவிகள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற் சங்கங்கள், மாணவர் சக்தி போன்றோர் சரியான தளம் அமைத்துக் கொடுக்கப்படாமையினாலும் தாமாகத் தளத்தை அமைத்து இயங்க முற்பட்டாலும் அவர்களைக் கை தூக்கி விட்டு, அவர்களை முன்னிலைப்படுத்த எந்த அரசியற் கட்சியும் முன்வராததாலும் மக்களிடையே அரசியல் அறிவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

இளைய சமுதாயம் தவறான, எழுச்சியுறா அரசியலைப் பார்த்துப் பார்த்து, அதை மட்டுமே உள்வாங்கி வாளாவிருக்கிறார்கள். இவையனைத்துக்கும் தமிழ் அரசியற் கட்சிகளின் அசமந்த, தேர்தல் நோக்கிய பயணிப்பு மட்டுமே காரணமாக இருக்கிறது. இது தமிழர் வாழ்வியலுக்கு மிகவும் ஆபத்தானது. உள்ளிருந்தே அரித்து எமது விடுதலை வேணவாவினை ஒன்றுமில்லாமற் செய்துவிடும். பொருளாதாரத்தடை, தொடர் குண்டு வீச்சுகள், இனப்படுகொலைகள் மத்தியிலும் சுயதேவைப் பூர்த்தியுடனும் ஒழுக்க விழுமியங்களுடனும் தம்மை ஸ்திரப்படுத்தியிருந்தவர்கள் எம் மக்கள். இன்று, ‘கார்ப்பெட் வீதி’, நவீன கைபேசிகள், சினிமா, மோட்டர் சைக்கிள்கள் என்று வசதிகள் திறந்து விடப்பட்டதும் சுதந்திரம் கிடைத்ததாக மகிழ்கின்றனர்.

எம்மிடம் இருந்ததை பறித்தெடுத்து விட்டு, நீண்ட கால போராட்டங்கள், உயிர்த்தியாகங்களின் பின் கொஞ்சம் கிள்ளிப் போட்டிருக்கிறார்கள் எம்மை அழிக்க நினைப்பவர்கள். பதிலுக்கு, திட்டமிட்டபடி நில அபகரிப்பு, கலாசார சீரழிவு, தமிழர் பிரதேசத்தில் குடிப்பரம்பலைக் குறைத்தல் என்று பாரிய இனவழிப்பு வேலைகள் தொடர்கின்றன. நாம் ஒரு இனமாக, தாயக நிலப்பரப்பு அற்றவர்களாக ஆக்கப்பட்டுக் கொண்டிருப்பதை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது தமிழ்க் கட்சிகளின் கடமையல்லவா?

இப்போது, கட்சிகள் ஒன்றிணைந்திருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்ற கருத்து சிலரிடையே இருந்தாலும், அண்மைய கடிதக் கையளிப்பு தமிழர்களின் அரசியலை மிகக் கீழ்நிலைக்கு எடுத்துச் சென்றிருப்பதான ஒரு கருத்தும் புத்திஜீவிகள் மட்டத்தில் நிலவுகிறது. இந்தியாவிற்கு எந்த அக்கறையுமில்லை என்பது 13ம் திருத்தச் சட்டம் வந்த இந்த 35 வருட காலத்தில் நிரூபணமாகியிருக்கிறது. ஆனாலும், பிராந்தியத்திலும் உள்நாட்டிலும் தனது நலனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அது தமிழர்களை மீண்டும் மீண்டும் பலியிடத் தயங்கப் போவதில்லை.

**ஆயிரம் பிளவுகளும் அறுபத் தெட்டுக் கொள்கைகளும் கொண்ட தமிழ்க் கட்சிகள் ஒன்றாகக் கூடிக் கையொப்பமிட்டது தமிழர் நலன் கருதியல்ல, தமது நலன் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான்**

சிங்கள அரசியலைப் பொறுத்தவரை, கோத்தபாயவின் உரையில் கூட தமிழர்களுக்கு இடமில்லை எனும்போது அவர்கள் அதிகாரம் எதனையும் பகிர்ந்தளிக்கப் போவதில்லை. ஆயிரம் பிளவுகளும் அறுபத்தெட்டுக் கொள்கைகளும் கொண்ட தமிழ்க் கட்சிகள் ஒன்றாகக் கூடிக் கையொப்பமிட்டது தமிழர் நலன் கருதியல்ல, தமது நலன் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் என்பது வெளிப்படையான அரசியலாகி விட்டது.

தமிழ்த் தேசியத்தின் பால் அக்கறை கொண்ட மக்கள் தளமும் வளமும் இல்லாது தவிக்கிறார்கள். மக்களை மையப்படுத்திய அரசியலைச் செய்ய எவருமில்லாத நிலை தமிழ்த் தேசியத்தை, எமது விடுதலையின் பாதையிலிருந்து இன்னும் பின்னோக்கித் தள்ளுகிறது. தம்மை விஞ்சி விடுவார்களோ என்ற அச்சத்தில் மக்களை முன்னிறுத்தாத அரசியலைச் செய்யும் மனோபாவம் இருக்கும் வரை எமக்கு நிரந்தரத் தீர்வு எதுவும் கிடைத்து விடாது.

தமக்கிடையேயான வேறுபாடுகளை உண்மையிலேயே துறந்து தொழிற்சங்கங்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், ஆய்வாளர்கள், ஊடகத்துறையினர் என்று பலரையும் இணைத்து ஒரு சிவில் சமுகமாக முன்னிறுத்தி, ஒரு தெளிவான பொறிமுறையுடன் மக்கள்முன் செல்லும் போது மட்டுமே மறுபடியும் ஒரு பலம் மிக்க தேசிய இனமாக எம்மால் நிமிர்ந்து நிற்க முடியும்.

- பாரி

# அத்திவாரக் கல் மேஜர் சோதியா



## மேஜர் சோதியா ( மைக்கேல் வசந்தி ) 26.09.1963 - 11.01.1990

சொந்த ஊரான நெல்லியடியில் இருந்து வீடு, வாசல், சொந்தபந்தம் அனைத்தையும் விட்டு இந்தியாவுக்கு வந்தபோது வசந்திக்கு வயது வெறுமனே இருபத்தொன்றுதான். எந்த இயக்கத்தில் இணைந்து எப்படிப் பயிற்சி எடுப்பது என்ற தீர்மானமோ, போர்ப் பயிற்சி பெற்று ஒரு பெரிய தளபதியாகி சாதனை செய்ய வேண்டும் என்ற எதிர்காலத் திட்டமோ அவரிடம் இருக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், அண்டை வீட்டவர்களுடன் அவர் வாய்த் தர்க்கத்திற்கூட ஈடுபட்டது கிடையாது. வசந்தி வீட்டில் இருக்கிறாரா இல்லையா என்பதுகூடத் தெரியாது என்பார்கள் அயலவர்கள். அவ்வளவு அமைதியானவர் வசந்தி. எங்களுக்கு தொடர்ச்சியாக இழைக்கப்பட்டு வரும் அநீதி எப்படி இளைஞர் யுவதிகளை ஆயுதப் போராட்டத்தினுள் தள்ளிச் சென்றதோ அவ்வாறுதான் வசந்தியும் ஏதாவது செய்து தமிழர்கள் நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டும் என்ற உத்வேகத்தோடு இந்தியாவுக்கு வந்திருந்தார்.



அங்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண்களுக்கான முதலாவது பயிற்சிப்பாசறையில் இணைந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது வசந்திக்கு. தாயகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த யுவதிகளுடன் அவரும் இணைந்து கொண்டார். வசந்தி 'சோதியா' என்று பெயர் மாற்றம் பெற்றார். சோதியாவின் நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் பெறத் தொடங்கின. தைரியமும் துணிச்சலும் மிக்க பெண்ணாக தன்னை இனம் காட்டினார் சோதியா.

நெடிதுயர்ந்த மெல்லிய தோற்றம் கொண்ட சோதியாவினுள் குழந்தைத் தனம் நிறையவேயிருந்தது. ஆனாலும், தன்னைவிடவும் வயதிற் குறைந்த பலர் இருந்த இடத்தில் ஒரு தாயாகவே மாறிப்போனார் சோதியா. வீட்டைப் பிரிந்து வந்த ஏக்கம், புது இடம், புது மனிதர்கள், மலைப் பிரதேச சீதோசணம், உடலை வருத்திப் பயிற்சிகள் என்று எல்லாமே புதியவையாக இருந்த போது பல சமயங்களில் உடல் நலக் குறைவும் சில சமயங்களில் மனச் சோர்வும் ஏற்படுவது இயல்புதானே? அப்படியான சமயங்களிலெல்லாம் தாயாகவும், மருத்துவத் தாதியாகவும் மற்றவர்களுக்கு உத்வேகமூட்டிய சோதியா பாசறையின் உத்தியோகபூர்வ மருத்துவத் தாதியாகவும் நியமிக்கப்பட்டார். பயிற்சியுடன் தனக்கெனத் தரப்பட்ட இந்த வேலையையும் திறம்படச் செய்தார் சோதியா.

பெண் போராளிகள் ஆரம்பத்தில் சில சண்டைகளில் பங்குபற்றி இருந்தாலும் அவர்களுக்கான களம்



விரிந்தது என்னவோ இந்திய இராணுவத்தினருடனான சண்டையில்தான். மணலாற்றுக் காட்டினுள், தலைவருக்கு அண்மையாக இருந்த பெண்கள் பிரிவிலிருந்த சோதியா, போர்க்களத்தில் ஒரு சிறந்த சண்டைக்காரராகவும் ஒரு சிறந்த மருத்துவராகவும் இருந்தார். அவரின் நிர்வாகத் திறன், கண்டிப்பும் கனிவுமாக போராளிகளை நடத்தும் பாங்கு, சலிக்காமல் எந்த வேலையையும் செய்யும் ஆற்றல் போன்ற தலைமைத்துவக் குணங்கள் என்பன சோதியாவை வளர்ந்துவரும் விடுதலைப் புலிகள் பெண்கள் படையணியின் முதலாவது தளபதி ஆக்கியது.

உத்தரவிட்டு உட்கார்ந்து இருப்பவர்கள் அல்லரே விடுதலைப் புலிகளின் தளபதிகள். தனக்குரிய வேலைகளுடன் தளபதிக்கான கடமையும் சேர, ஓய்வின்றி இயங்கினார் சோதியா. அவ்வளவு பிள்ளைகள் இருந்தாலும் அவரவர்க்கு என்ன செய்ய வேண்டும் என்பதை தானே பார்த்துப் பார்த்து படையணியை வளர்த்தெடுத்தார் அவர். மற்றவர்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்ட சோதியா தனக்குக் காய்ச்சல் வந்த போது அதைப் பொருட்படுத்தவில்லை. அவரை ஓய்வெடுக்கச் செய்வதே பெரும்பாடாயிருந்தது. சில நாட்களில் நோய் தீவிரமடைந்தது. எந்த சிகிச்சையும் பலனளிக்கவில்லை. நோய் அவரைத் தின்று தீர்த்தது. பெண்கள் பிரிவின் முதலாவது படைத்தளபதி கண்முன்னே காணாமற் போக அத்தனை பேரும் பரிதவித்துப் போயினர். சோதியாவின் உடல் நெல்லியடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலி நடைபெற்றது.

சோதியா கண்ணும் கருத்துமாக வளர்த்த பிள்ளைகள் சண்டைக் களத்தில் சண்டமாருதமாக நின்றார்கள். 'சோதியா படையணி' என்ற பெயருடன் எதிரிக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய இந்தப் படையணியின் அத்திவாரக் கல் சோதியா வரலாற்றில் மறக்க முடியாத ஒரு அங்கமாகி விட்டார்.

- துர்க்கா


கண்ணீருக்கும்

கதறலுக்கும்

பதில் கிடைத்தது

மரண சாசனமாக

fhzhky; Mf;fg;gl;Nlhu;.




பனியிலும் குளிரிலும் நகரும்

வாழ்க்கை

சுகமாய் சுட்டெரிக்கும்

சூரியனாக

ஊர் ஞாபகம்



# கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர்



**கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுபவித்தவர். தலைவரின் இலட்சியத்திற்கு தோள் கொடுத்து அவரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.**



அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர்,

"கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில் வளர்த்த நேயம் அது."

என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பினை வெளிப்படுத்துகிறார்.

கிட்டு எந்தளவிற்கு தலைவரின் மனதில் இடம்பிடித்தாரோ அதேயளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1979ல் ஆரம்ப காலப் பகுதி. விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளமிடப்பட்ட காலம். சதாசிவம் கிருஸ்ணகுமார் என்னும் பதினெட்டு வயது நிறைந்த இளைஞன் தன்னை விடுதலைப் போராளியாக மாற்றியதன் மூலம் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள். கிட்டுவின் துடிப்பும், வேகமும் அங்கிருந்தவர்களிடையே அவரை வேறுபடுத்திக் காட்டியது.

எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற வேகமும் எந்த விடயத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் கிட்டுவிற்கு இயல்பாகவே இருந்ததால் தலைவரின் எண்ணங்களை, சிந்தனைகளை, மக்கள் மீது



அவர் கொண்டிருந்த எல்லை கடந்த பாசத்தை, தலைவரின் அருகில் இருந்து கிட்டு அறிந்து கொள்கிறார். அளவு கடந்த திறமையுடன் வேகமும் விவேகமும் நிறைந்த அவரது செயற்பாடுகள் அவர் மீதான தனி நம்பிக்கை வளரக் காரணமாகின்றன. தன் மீது தலைவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் காலம் கனிந்துவரும் வரை கிட்டு காத்திருக்கிறார்.

1983 மார்ச் 04 இல் பொன்னம்மான் தலைமையில் உமையாள்புரம் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளின் அணி ஒன்று செல்கிறது. அதில் கிட்டுவும் ஒருவர். தாக்குதலுக்கான களம் தீர்மானிக்கப்படுகிறது. வீதியில் நிலக் கண்ணிவெடிகளை பொருத்திவிட்டு எதிரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகளை கையாளும் போதியளவு செயற்திறன் போராளிகளுக்கு இல்லாத காலம் அது. இராணுவ வாகனங்கள் இலக்காக அண்மிக்கும் நேரத்தில், துரதிஸ்ட வசமாக வாகனங்களைக் கண்டு மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் கால்கள் பட்டு கண்ணிவெடிகள் வெடிக்க போராளிகள் நிலை குலைந்து போகிறார்கள்.

துப்பாக்கி ரவைகளைக் கக்கியவாறு இரு இராணுவ கவச வாகனங்கள் போராளிகளை நெருங்கிவர, பின்வாங்கிச் செல்வதைத்தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கிட்டு மட்டும் எதிரியை எதிர்கொள்ளும் சாதகமற்ற களநிலையைக் கருத்திற்கொள்ளாது துணிந்து நின்று, தான் வைத்திருந்த ஜி-3 (G-3) துப்பாக்கியால் இராணுவக் கவசவாகனத்தை நோக்கிச் சுடுகிறார். இலக்குத் தவறவில்லை. சாரதி காயப்பட வாகனம் செயலற்றுப் போகிறது. தலைவரின் நம்பிக்கையை மெய்ப்பித்த மகிழ்ச்சியோடு கிட்டு களம் விட்டு அகன்றார். அவரின் முதல் களமே தனி மனித சாதனையாக ஆரம்பமாகிறது.

1983 ஏப்ரல் 07 அன்று விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின், சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், ஜூலை 23ல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொண்டார் கிட்டு. இந்த ஆண்டின் இறுதிக் காலத்தில் இந்திய மண்ணில் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக கிட்டு நியமிக்கப்படுகின்றார்.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 02இல் நடைபெற்ற குருநகர் இராணுவ முகாம்



தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்துகின்றார். இதேநேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 09 இல் எதிரியுடனான மோதலில் வீரச்சாவடைய, அவரின் இடத்திற்கு கிட்டு தலைவரால் நியமிக்கப்படுகின்றார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார்.

யாழ். மாவட்டத்தில் கிட்டுவின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிரிப்படை யாழ். மண்ணில் அவனுடைய முகாமுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. யாழ். கோட்டையை ஆக்கிரமித்திருந்த சிறீலங்கா இராணுவம் கிட்டு என்ற பெயரைக் கேட்டாலே கதிகலங்கிப் போகும் நிலை உருவானது. மக்கள் மத்தியில் கிட்டு என்ற மூன்றெழுத்துப் பெயர் மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. யாழ். மண்ணில் எதிரிப்படையை மட்டும் அவர் வெற்றிகொள்ளவில்லை. மாறாக, மக்களின் மனங்களையும் அவர் வெற்றிகொண்டார்.





மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார். தொழில் நிலையங்கள், நூலகங்கள், மலிவுவிலைக் கடைகள், பூங்காக்கள் என்பவற்றை நிறுவி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார்.

இவ்வாறாகக் கிட்டுவின் சமூகப்பணிகள் விரிவடைய, அவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஒப்பற்ற போராளியாக மக்களால் உணரப்பட்டார்.

தமிழீழ மக்கள் மனங்களில் மாத்திரமல்ல, எல்லைகடந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருமே கிட்டுவின் வீரசாதனைகளை அறிந்து பெருமிதம் அடைந்தார்கள். விடுதலைப் புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக, 1986 நவம்பர் 10 அன்று, சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது.

1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்த கிட்டு தனது மனஉறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார்.






இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்ற கிட்டு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில், இந்திய அரசினால் திணிக்கப்பட்ட போரின் உண்மை நிலைப்பாட்டை வெளிக்கொணர பெரிதும் பாடுபட்டார். இந்திய அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரையும் சந்தித்து, எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துரைத்தார். எமது தியாக வரலாறுகளை பல வெளியீடுகள் மூலம் இந்திய மக்களின் பார்வைக்குக் கொண்டுவந்தார்.

இவ்வாறான நிலையில் கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்து வைத்திருந்தது. சிறைக்குள் இருந்தபடியே அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தேவி' இதழுக்கு போராட்டம் தொடர்பான நீண்ட தொடர் கட்டுரையை எழுதினார். சிறையிலிருக்கும் தன்னை விடுவிக்கும்படி கிட்டு நடாத்திய அகிம்சைப் போருக்கு அஞ்சிய இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது. இதன் பின்னர், கிட்டு வன்னிக் காட்டில் தலைவரைச் சந்தித்து இந்திய இராணுவத்திற்கு எதிரான போருக்கு இறுதிவரை முகங் கொடுத்தார்.

இந்திய இராணுவம் மெல்ல மெல்ல தோல்விமுகம் காணும் நிலை உருவானது. அமெரிக்காவிற்கு வியட்நாமும், ரஸ்யாவிற்கு ஆப்கானிஸ்தானும் புகட்டிய பாடத்தை தமிழீழம் இந்தியாவிற்குப் புகட்டியது. இந்நிலையில் இலங்கை அரசு இந்தியாவை நிராகரித்து புலிகளுடன் பேச முன்வந்தது. 1989இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற






குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார்.

கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார். 'களத்தில்', 'எரிமலை' எனப் பல்வேறு சஞ்சிகைகள் மூலம் ஈழத்தில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், எனப் பல்வேறு அமைப்புக்களையும் வெளிநாட்டில் அமைத்துச் செயற்பட்டார்.

விடுதலை உணர்வையும், தாய் மண்ணின் பற்றுறுதியையும் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்த மக்கள் மறந்து போகாவண்ணம் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தினார். எனினும், கிட்டு எங்கு தான் வாழ்ந்தாலும், எப்பணியைச் செய்தாலும் அவர் மனம் தமிழீழ மண்ணையே சுற்றிவந்தது. அவர் தலைவரை, தாயகத்தை, தமிழீழ மக்களை ஆழமாக நேசித்தார். தமிழீழத்தில் எப்போது தனது கால் மீண்டும் பதியும் என ஏக்கத்தோடு காத்திருந்தார்.




கிட்டு எதிர்பார்த்திருந்தது போல தமிழீழத்திற்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. குவேக்கஸ் சமாதானக் குழுவின் யோசனைகளுடன் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து சர்வதேச கடற்பரப்பினூடாக 'எம்.வி அகத்' என்ற கப்பலில் கிட்டுவும் அவரது தோழர்களும் பயணமானார்கள். யாரும் சென்று வரக்கூடிய சர்வதேச கடற்பரப்பில் இந்தியா தனது சதிவலையைப் பின்னியது. இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் கிட்டுவின் கப்பலை மறித்து வலுக்கட்டாயமாக தனது எல்லைக்குள் இழுத்துச் சென்றது.

சமாதான முயற்சிகள் பற்றி இந்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவை பயனற்றுப் போயின. குமரப்பா, புலேந்திரன், திலீபன், ஜொனி என எமது தளபதிகளின் தொடர் இழப்புக்குக் காரணமான இந்தியா தனது பொறிக்குள் மூத்த தளபதி கிட்டுவையும் சிக்கவைத்தது. உயிரிலும் பெரிது தன்மானம் என நினைக்கும் தலைவனின் வழியில் வளர்ந்த கிட்டுவும் ஒன்பது தோழர்களும் அன்று ஆட்சியிலிருந்த இந்திய அரசிடம் பணிந்து போகாது. தமிழீழத்தை, தலைவனை நினைத்தவாறே தீயில் கலந்து கடலில் சங்கமித்துப் போனார்கள்.

**- துவாரகா**

'கிட்டு ஒரு தனிமனித
சரித்திரம்,
நீண்ட ஓய்வில்லாத
புயலாக வீசும்
எமது விடுதலை
வரலாற்றின்
ஒரு காலத்தின் பதிவு'



*– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்.*

# உன்னதமான போராளி



# கப்டன் பண்டிதர்

## ( 25.12.1959. - 09.01.1985 ) கம்பர்மலை யாழ்ப்பாணம்

கப்டன் பண்டிதர். தேசியத் தலைவரின் நம்பிக்கைக்கு உரியவராக தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் கழித்த ஒரு உன்னதமான போராளி. தலைவரிடம் இருந்த நற்குணங்கள் அத்தனையையும் தன்னுள்ளே வளர்த்தெடுத்து, அவற்றை அப்படியே நாட்டு விடுதலைக்கான பயணத்தில் முழுமையாக அர்ப்பணிப்பதில் வெற்றி கண்டிருந்தார் பண்டிதர். தான் ஒரு விடுதலை அமைப்பின் தலைவராக இருந்த போதிலும், பண்டிதருக்கு நான் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்று தலைவரே கூறும் அளவிற்கு அவரின் மரியாதைக்குரியவராக இருந்தவர்.

யாழ் வடமராட்சி கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ரவீந்திரன் 1977இல் புலிகள் இயக்கத்தில் இணைந்து பண்டிதராகினார். 'பண்ணைக் காய்கள்' என்று அன்பாக அழைக்கப்படும் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இருந்த காலம் அது. தங்குமிடங்களை அடிக்கடி மாற்ற வேண்டிய சூழ்நிலை, பொருளாதார வசதியின்மை, மறைந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம், ஆயுதத் தளபாடங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் எதுவுமில்லாமல் ஒன்றிரண்டு ஆயுதங்களுடன் விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டிய நேரம். கடமையுணர்வுடனும் இலட்சியப் பற்றுடனும் தன்னுடைய கடும் உழைப்பைக் கொடுத்து இயக்கத்தை வளர்த்தெடுக்க தலைவருடன் இணைந்து அரும்பாடுபட்டார் பண்டிதர். இயக்கத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பானவராக திகழ்ந்தார். தலைவரின் வலது கரமாக அவருடன் அருகிலிருந்து இயங்கிய பண்டிதர், இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களுடன் இணைந்து பல்வேறு கெரில்லாத் தாக்குதல்களில் பங்குபற்றியுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 1983 திருநெல்வேலித் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தலைவர் உட்பட பல தளபதிகளும் நேரடியாகப் பங்கு கொண்டனர். தாக்குதலிற்கு புறப்படும்போது பண்டிதரைத் தாக்குதல் குழுவில் இணைக்காமல் தலைவர் அவரிற்கு மாபெரும் பொறுப்பு ஒன்றை வழங்கியிருந்தார். அதாவது, முதன்முறையாக பெரியதொரு பதுங்கித் தாக்குதலை மேற்கொள்ள இருப்பதும் தாக்குதல் வெற்றியடையாமல் பாரிய இழப்பு ஏற்பட்டு தானும் உயிர் தப்பாமல் போனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தலைமையேற்று நடாத்தும் பொறுப்பு பண்டிதரிடம் தலைவரால் ஒப்படைக்கப்பட்டது. தலைவரின் இந்த முடிவு சகல மூத்த உறுப்பினர்களாலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது மாத்திரமல்லாமல் பின்னைய காலங்களில் பண்டிதர் மீது அதி உச்ச மதிப்பும் மரியாதையும் ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகள் அமைப்பு வளர்ந்து வரும் காலத்தில் அதன் ஆயுத மற்றும் நிதிப் பொறுப்பாளராக இருந்தவர் பண்டிதர். மத்திய குழுவின் மிக முக்கிய உறுப்பினராக இருந்த பண்டிதர் ஒரு கட்டத்தில் முதலாவது யாழ் மாவட்டப் பொறுப்பாளராகினார். அவர் அழகாகப் பாடல்கள் புனையக் கூடியவர் என்பது அவருடன் இருந்தவர்களுக்குத் தெரியும். பல உள்ளகப் பொறுப்புகளைத் தாங்கி இரவு பகலாக விடுதலைக்காகப் பாடுபட்ட பண்டிதர் ஒரு ‘ஆஸ்த்மா’ நோயாளி. அவருடைய தன்னம்பிக்கையை அவரது வியாதியால் எதுவும் செய்ய முடியவில்லை. ‘சே குவேரா’வை ஞாபகமூட்டுகிறது அல்லவா? எந்த ஒரு சக்தியும் விடுதலை வேட்கையைக் கட்டுப்படுத்தாது என்பதற்கு இவை வரலாற்றுச் சான்றுகள்.

அன்றைய காலத்தில் ஒருவருக்கான ஒரு நாள் சாப்பாட்டுச் செலவு பத்து ரூபாய்களை மாத ஆரம்பத்திலேயே உறுப்பினர்களுக்குக் கொடுத்து விடுவார் பண்டிதர். செலவுக் கணக்கு சரியான முறையில் வந்து சேர்ந்தால்தான் அடுத்த மாதச் சாப்பாட்டுப் பணம் கிடைக்கும். தலைவரும் இதற்கு விதிவிலக்கல்ல. பகல் முழுவதும் சைக்கிள் மிதித்து அயராது உழைக்கும் போராளி, விசுவாசமானவர், தலைவரின் நம்பிக்கைக்குரியவர், ஆவணப் பொறுப்பாளர், இயக்கத்திலிருந்த அத்தனை ஆயுதங்களுக்கும் பொறுப்பாளர், அவை வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் அவருக்கும் தலைவருக்கும் வேறு இருவருக்கும் மட்டுமே தெரியும், இவருடன் தொடர்பு கொண்ட இளையோர் இயக்கத்தில் இணைந்து கொள்கின்றனர், மத்திய குழு உறுப்பினர் என்று பன்முகம் கொண்ட பண்டிதர், இராணுவத்தினருக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருந்ததில் ஐயமில்லை.

09.01.85 அன்று அதிகாலை. அச்சுவேலியில் இரகசியமாக இருந்த இயக்க முகாம் ஐநூறுக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. மோதல் வெடித்தது. அந்தக் கிராமத்தில் கோர வெறியாட்டம் ஆடினார்கள் இராணுவத்தினர்.

முற்றுகையை உடைத்து போராளிகள் வெளியேறினார்கள். சங்கேத மொழியில் தான் அழகாகத் தொகுத்து வைத்திருந்த ஆவணங்கள் இராணுவ வசம் அகப்படாமல் மீட்கப்பட வேண்டிய கட்டாயம். முற்றுகையை ஊடறுத்து மீண்டும் உள்நுழைந்த பண்டிதர் அந்தச் சண்டையில் வீரச்சாவைத் தழுவுகிறார்.

இந்தச் சுற்றிவளைப்பில் பண்டிதருடன் சேர்த்து ஆறு பேர் வீரச்சாவடைந்திருந்தனர். புலேந்தி அம்மான், வேறு சில முக்கிய உறுப்பினர்கள் உட்பட பத்துப் போராளிகள் தப்பியிருந்தனர். காட்டிக் கொடுப்பினால் அச்சுவேலியில் ஆயுதக் கிடங்கு ஒன்று இராணுவ வசமானதை இராணுவத்தினர் விழாவாகக் கொண்டாடினர். இயக்கத்தை அழித்து விட்டதாக மார் தட்டினர். போராளிகள் தப்பியதை சீரணிக்க முடியாமல் பொதுமக்களை கொன்றும், 50 இற்கு மேற்பட்ட இளைஞர்களைக் கைது செய்தும் தமது வெறியைத் தணித்துக் கொண்டனர்.

பின்னாளில் இயக்கம் ஒரு மாபெரும் விருட்சமாக வளர்ச்சியடைய அத்திவாரமாக இருந்தவர் கப்டன் பண்டிதர். கசங்கிய காற்சட்டையுடன் சைக்கிளில் திரிந்து வேலை செய்த காலத்தில் புலிச் சின்னம் வேண்டும், கொடி பறக்க வேண்டும், எங்கள் போராளிகள் சீருடையணிந்து போருக்குச் செல்ல வேண்டும், வானத்தையும் எங்கள் வசப்படுத்த வேண்டும் என்று வளர்ச்சி பற்றி கனவு கண்டவர். பின்னாளில் அத்தனையும் நிஜமாக அத்திவாரமாக இருந்த அந்த உன்னதமான போராளி என்றும் எங்கள் மனதில் இருப்பார்.

**- ரத்தி**



# வரலாற்றில் ஒரு நாள்



உலகில் எத்தனையோ நாடுகளில் அடக்கப்படும் இனங்கள் பொங்கியெழு-ந்து விடுதலைப் போராட்டங்களை நட-த்தியிருக்கின்றன. அவற்றில் எத்தனையோ போராட்டங்கள் வெற்றி பெற்று தனி நாடாகியிருக்கின்றன.. சில போராட்டங்கள் அடக்குமுறையாளர்களால் நசித்து அழிக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் நீண்டுகொண்டேயிருக்கும் போராட்டங்களும் உண்டு. இந்தப் போராட்டங்களில் பல்லாயிரக் கணக்கான போராளிகள் தங்கள் உயிரை ஆகுதியாக்கி இருக்கிறார்கள்.

ஆனால், உலக வரலாற்றிலேயே முதற் தடவையாக மாவீரர்களுக்கு துயிலும் இல்லங்கள் அமைத்து, கல்லறைகள் கட்டி அவர்களைப் பூசித்தது எங்கள் விடுதலைப் போராட்டத்தில் மட்டும்தான். இந்த வரலாறு உலகில் வேறு எங்குமே இல்லை.

மக்களுக்காக தம்மைத் தற்கொடையாக்கிய எம் மாவீரர்களை தன் உயிரி-னும் மேலாக மதிப்பவர் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

“நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும் போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயி-னும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புகள் எனது இலட்சிய உறுதிக்கு மேன்மேலும் உரமூட்டியிருக்கின்றன.”

இது தலைவர் அடிக்கடி கூறுவது.

1989 இல் முதன் முதலில் மாவீரர் நாள் கொண்டாடப்பட்டபோது மாவீரர்கள் உடல்கள் எரியூட்டப்பட்டு வந்தன. பின்-னர், எந்த மண்ணுக்காக மாவீரர்கள் உயிரைக் கொடுத்தார்களோ அந்த மண்ணிலே அவர்கள் விதைக்கப்பட வேண்டும் என்ற தலைவரின் விருப்பத்திற்கமைய, துயிலுமில்லங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் வீரச்சாவடைந்தவர்களின் கல்லறைகள் கட்டப்பட்டன. எந்த வேலையாக இருந்தாலும் மாவீரர்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தால் அதற்கு முன்னுரிமை கொடு-க்க தவறியதேயில்லை தலைவர்.

1998ம் ஆண்டு நடுப்பகுதி. வன்னிப் பெருநிலப் பரப்பைக் கைப்பற்றும் நோக்கில் ‘ஜெயசிக்குறு’ என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினான் எதிரி. முப்படைகள் கொண்டும் மூர்க்கமாகத் தாக்கினான். பொருளாதாரத் தடை வேறு. மக்கள் குடியிருப்புக்களையும் தாக்கினான் எதிரி. போராளிகள் ஓய்வொழி-ச்சல் இன்றி எதிரிக்குப் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தனர். இந்த மறிப்பு மற்றும் வலிந்த சண்டைகளுக்கான ஆழ்கடல் விநியோக நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியிருந்தனர் கடற்புலிகளின் ஆண், பெண் போராளிகள். காலநிலையும் சாதகமாக இல்லாததால் அவர்களின் வேலையும் கடினமாயிருந்தது. சாளையில் இருந்த தளத்தில், கப்பலிலிருந்து தாக்குதலுக்கான ஆயுத தளபாடங்-களை இறக்கிக் கொண்டிருந்தார்கள். அச்

# வரலாற்றில் ஒரு நாள்

சமயத்தில், சர்வதேச கடற்பரப்பில், முக்கிய பொருட்களடங்கிய இரு கப்பல்களும், கடற்புலிகளிற்கான ஒரு விநியோகக் கப்பலும் இறக்குவதற்காகக் காத்துக் கொண்டிருந்தன. அப்போது சிமெந்துடன் இன்னுமொரு கப்பல் வருவதாக தகவல் வந்தது. எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு சிமெந்தை தரையிறக்குமாறு தலைமையிடமிருந்து அறிவுறுத்தல் வந்தது.

போராளிகளுக்கு திகைப்பு. சண்டைக்கான ஆயுதங்கள் இருந்தால் எதிரியை ஓட ஓட விரட்டலாம், இப்போது எதற்கு சிமெந்து? தளபதி சூசை, அண்ணாவிடம் தன் சந்தேகத்தைக் கேட்டார்.

'சண்டை மட்டுமே பிடித்துக் கொண்டிருந்தால் மாவீரர்களுக்கான கல்லறைகளை எப்போது கட்டுவது? எனக்கு மாவீரர்களுக்கான மரியாதை முக்கியம். அவர்கள் எங்கள் மனங்களில் இருக்கும் போது எதிரியை அடித்து விரட்டுவதற்கான உறுதி எழும். முதலில் கல்லறைகள் கட்ட வேண்டும்.' என்று உறுதியாகச் சொன்னார் தலைவர்.

இன்று, எங்கள் துயிலுமில்லங்கள் எதிரியினால் இடித்து நொருக்கப்பட்டு விட்டன. இறந்த போராளிகளின் நினைவாலயங்கள் கூட இன்றும் எதிரிக்கு திகைப்பையும் பயத்தையும் கொடுக்கின்றன. ஆனாலும்.. தமது குழந்தைகள், உறவினர், நண்பர்கள் துயிலும் இடம் எதுவென்று எம் மக்களுக்குத் தெரியும். விதைக்கப்பட்ட இடங்கள் இன்றும் பூசிக்கப்படும் இடங்களாகவே உள்ளன. தலைவரின் முன்யோசனையினால், எங்கள் மாவீரர்கள் விதைக்கப்பட்டு தாம் நேசித்த மண்ணோடு மண்ணாகக் கலந்து, இன்றும் வாழ்கிறார்கள்.












# காற்றோடு காற்றான எங்கள் பொன்னம்மான்!




பொன்னம்மான் என்றாலே ஞாபகத்திற்கு வருவது அவர் எப்போதும் அணியும் நீல நிற ரீசேட்டும் அவரின் புன்னகையும் தான். 1970களின் நடுப்பகுதியில் எமது தலைவரைத் தொடர்பு கொண்டு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர் அம்மான். 1979இல் இயக்கத்தில் முதன்முதலில் மாங்குளத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றவர். இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பயிற்சிப் பாசறையின் பொறுப்பாளராக இருந்து இயக்க விதிகளுக்கமைய பயிற்சியளித்து, பல மூத்த போராளிகளை உருவாக்கினார். இந்த முதலாவது பாசறையில்



தான் கிட்டு, புலேந்தி அம்மான், கணேஸ், பொட்டு, சூசை, கேடில்ஸ், ராதா, விக்டர், பரமதேவா, அருணா போன்ற தளபதிகள் பயிற்சி பெற்றார்கள். பெண்களுக்கான பயிற்சிப் பாசறை ஏழாவது பாசறை. அதற்கும் அம்மான்தான் நிர்வாகப் பொறுப்பாகவிருந்தார். அது மாத்திரமல்லாமல் இந்தியாவில் இருந்த சகல பயிற்சி முகாம்களிற்கும் பொன்னம்மானே பொறுப்பாளர். பல நூற்றுக் கணக்கான சாமானியர்களை, சிறந்த போராளிகளாக்கி பயிற்சிப் பாசறையிலிருந்து அனுப்பிய பெருமை பொன்னம்மானையே சாரும்.

தலைவரோடு தோளோடு தோள் நின்று, அவரின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து இயக்கத்தை வளர்த்து விட்டவர் அம்மான். அம்மான் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். பயிற்சி முகாம்களில் இரவுப் பொழுதுகளில் அம்மானின் பாட்டுகளுக்கு ஒரு தனியிடம் உண்டு. புத்தகங்கள் வாசிப்பதில் அலாதிப் பிரியம். அதிலும் இராணுவ தொழில் நுட்பம் சம்பந்தமான எந்தப் புத்தகம் கிடைத்தாலும் அதை வாசித்து, அந்தத் தொழில்நுட்பத்தை எப்படி எங்களுடைய ஆயுதத் தளபாடங்களில் பிரயோகிக்கலாம் என்று பார்த்து உடனே அதனைச் செய்தும் விடுவார். ஆயுதங்களைப் புதிதாக வடிவமைப்பதிலும் வெடிமருந்துகளைக் கையாள்வதிலும் வல்லவர் அம்மான். பயிற்சிப் பாசறைகள், ஆயுத சேகரிப்பு, வடிவமைப்பு, ஆயுத உற்பத்தி என்று பல பொறுப்புகளை திறம்பட நடத்தியவர் அம்மான். 1985 காலப் பகுதியில் கையெறி குண்டுகளுக்கான தேவை அதிகரித்த போது அம்மானின் முயற்சியினால் மாதம்





ஆயிரம் கைக்குண்டுகள் அளவில் தயாரிக்க முடிந்தது. அதற்காகவே புதிய போராளிகளைத் தேர்ந்தெடுத்து ஆயுத உற்பத்திப் பிரிவொன்றை உருவாக்கினார் பொன்னம்மான்.

யாழ் திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீதான தாக்குதல், உமையாள்புரத் தாக்குதல் என்று பல முக்கியமான தாக்குதல்களில் பங்குபற்றியவர் அம்மான். வெட்டவெளியின் நடுவில், கடல் நீர் சூழ இருந்த நாவற்குழி முகாமைத் தாக்க கிட்டண்ணா திட்டம் தீட்டியபோது அதன் மூளையாக நின்று தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்தார் பொன்னம்மான். வெட்ட வெளியில் எமது ஒவ்வொரு அசைவையும் எதிரியால் இலகுவாகக் கண்காணிக்க முடியும், எமது தரப்பில் இழப்பு அதிகரித்து விடும் என்பதால், வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. எதிரி அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குள் முகாமினுள் நுழைந்து விடலாம் எனத் திட்டம். இதனால், இராணுவத்திற்கு வழமையாகத் தண்ணீர் கொண்டு செல்லும் பவுசரினுள் வெடிமருந்து வைக்க திட்டம் தீட்டப்பட்டது.

இதற்காக கொண்டுவரப்பட்ட பவுசர் வண்டி கைதடியில் வைத்து பழைய, வழமையாக முகாமுக்கு போய்வரும் வண்டிபோல மாற்றப்பட்டது. தண்ணீர்த் தொட்டியின் ஒரு பகுதி வெடிமருந்தால் நிரப்பப்பட, மற்றைய பகுதி தண்ணீரால் நிரப்பப்பட்டது. 14.02.1987 அன்று பிற்பகல். இராணுவ முகாமிற்கு அனுப்பப்படுவதற்கு முன்பு தண்ணீர்த் தொட்டியில் ஏற்பட்ட ஒழுக்கை சரி செய்வதற்காக ஒட்டு வேலை



நடந்து கொண்டிருந்தது. திடீரென ஏற்பட்ட பாரிய வெடிச்சத்தம் யாழ் நகரை உலுக்கியது. என்ன ஏது என்று அறியுமுன்னரே, நடந்த பாரிய வெடிவிபத்தில் பொன்னம்மானும் இன்னும் பத்துப் பேரும் காற்றோடு கலந்து விட்டிருந்தனர். எந்த மண்ணை நேசித்தாரோ, எந்த மண்ணுக்காகவே சுவாசித்தாரோ அந்த மண்ணிலேயே காற்றோடு கலந்து இன்றும் வாழ்கிறார் பொன்னம்மான்.

**- ஆம்பல்**

# முதல் இராணுவ முகாம் தாக்குதலும் முதல் போர் நாவலும்

சுந்தரி


தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவது ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் 13.02.1985 அன்று இடம் பெற்றது. பதுங்கித் தாக்குதல், பொலிஸ் நிலையங்கள் மீதான தாக்குதல்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்த தமிழீழ விடுதலைப்புலிகள் அடுத்த கட்டமாக இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலிற்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டனர். அதன் முதற்கட்டத் தெரிவாக கொக்கிளாய் இராணுவ முகாம் இருந்தது.


நீண்ட நாட்களாக நேர்த்தியாகத் திட்டமிட்டிருந்தாலும் முகாமை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடியதாக தாக்குதல் முழுமையான வெற்றியாக இருக்கவில்லை. போதிய ஆயுதபலம் இல்லாததும் ஒரு காரணமாக இருந்தாலும் கிடைக்கப்பெற்ற வேவுத் தகவல்களிற்கும் இறுதி நேரத்தில் இராணுவ முகாமின் வடிவமைப்பிற்கும் சற்று வித்தியாசம் இருந்ததாக உணரப்பட்டது. அத்துடன் கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலிற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பே விடுதலைப்புலிகளின் பாரிய ஆயுதக் கிடங்கு அச்சுவேலியில் சுற்றி வளைப்பிற்குள்ளாகி பல ஆயுதங்கள் இழக்கப்பட்டிருந்தன.

பல அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்த கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் 16 விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர். கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குலின் நிகழ்வுகளை நூல் வடிவில் கொண்டுவரவேண்டும் என்பது கிட்டண்ணாவின் விருப்பமாக இருந்தது. கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் ஈடுபட்டவர்களிடம் தகவல்களைப் பெற்று நூல் வடிவில் கொண்டு வரவேண்டும் என போராளி சுபாஸ்(பாலகணேஸ்) இற்கு கிட்டடண்ணா உத்தரவிட்டார். கிட்டண்ணாவின் உத்தரவிற்கமைய கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் சம்பவங்கள் "விடிவிற்கு முந்திய மரணங்கள்" என்ற பெயரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவால் நாவலாக உருவாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் முதலாவது போர் நாவலாக வெளிவந்து பலரதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டது.




கொக்கிளாய் நோக்கி .....







பிரபாகரன் (ஜெகன்)
26- 01- 1963
உப்புவெளி




சந்திரகுமார் (காந்தரூபன்)
30 - 07 - 1964
மட்டக்களப்பு




பரமேஸ்வரன் (காந்தி)
17 - 08 - 1956
தம்பலகாமம்




சிறீமுருகன் (காத்தான்)
5- 03- 1931
பரந்தன்




செல்வராசா (கெனடி)
வயது - 23
கிரான்




செல்வராசா (மகான்)
26 - 05 - 1962
கம்பர்மலை




துவாரகன் (மயூரன்)
மிசாலை
02 - 02 - 1967



ஜெயந்தன் (நிமால்)
வயது - 18
தும்பளை




எம். கே. கேமசிறி (வின்சென்ற், பழசு)
வயது - 21
பருத்தித்துறை




தர்மராசா (ரவி)
செம்மலை
02 - 11 - 1961




பாலகணேசன்
(சங்கரி)
வயது 21
வல்வெட்டித்துறை



ரஞ்சன் (சைமன்)
வயது - 26
பொத்துவில்




அன்ரனி (சொனி)
வயது – 19



வரேந்திரன் (தனபாலன்)
வயது - 19
காரைநகர்



இராசநாயகம்
(வேதா, சிவா)
30-10-1959
கண்டாவளை



சண்முகநாதன் (றஞ்சன், மாமா)
16 – 01 – 1931
கண்டாவளை

# தமிழர் பாரம்பரிய மரபுத் திங்கள்

அத்தி




ஒவ்வொரு ஜனவரி மாதத்தையும் தமிழர் பாரம்பரிய மரபுத் திங்களாக கொண்டாடுவதாக 2010ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நடைமுறை, இன்று உலகளாவிய ரீதியில் வியாபித்து வருகிறது. கனடாவில் ஆரம்பத்தில் தமிழர் அமைப்புகள் தாமாகவே இதனை முக்கியமான தமிழர் விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தன.

கனடாவில், தமிழ் மக்கள் அதிகமாக வாழும் ஒன்ராறியோ மாகாணசபை 2014ஆம் ஆண்டில் இதனை ஒரு சட்டமாக நிறைவேற்றியது. கன்சர்வேற்றிவ் ( Conservative ) கட்சி உறுப்பினரான ‘ரொட் சிமித்’ கொண்டு வந்த தனிநபர் பிரேரணை சகல கட்சிகளினதும் ஆதரவுடன் 2014 மார்ச் 17ம் திகதி 2ம், 3ம் வாசிப்புகளில் நிறைவேறியதை அடுத்து, மார்ச் 25ம் திகதி மாகாண பிரதி ஆளுநர் நாயகம் ஒப்பமிட்டதுடன் சட்டமாகியது.

கனடிய நாடாளுமன்றத்தில் எம்.24 இலக்கத் தில் தமிழர் பாரம்பரியத் திங்கள் ஒரு தீர்மானமாக 2016 செப்டெம்பர் 29 இல் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியால் முன்மொழியப்பட்ட இத்தீர்மானத்திற்கு சகல பிரதான கட்சிகளும் ஆதரவாக வாக்களித்தன.

ஒன்ராறியோவில் ரொறன்ரோ, மார்க்கம், ஒட்டாவா, பிராம்டன் உட்பட அனேகமான நகர சபைகளும், ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையும் இதனைத் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளன. கடந்த மாதம் இங்கிலாந்தின் லண்டன் பெருநகர சபையும் தமிழர் பாரம்பரியத் திங்களை நிறைவேற்றியது. இதன் மூலம் இதன் எல்லைக்குட்பட்ட சகல நகர சபைகளும் தமிழர் பாரம்பரியத் திங்களைக் கொண்டாட வாய்ப்புக் கிடைத்துள்ளது.







தை மாதம் தமிழர்களுக்கு முக்கியமான ஒன்று. தைப்பொங்கல், உழவுக்குப் பெருமை தரும் பட்டிப் பொங்கல் உட்படப் பல கொண்டாட்டங்கள் இம் மாதத்தில் இடம்பெறுகின்றன. தமிழ் மொழி செம்மொழிகளில் ஒன்று. உலகளாவிய ரீதியில் இதுவரை பத்து தமிழாராய்ச்சி மாநாடுகள் இடம் பெற்றுள்ளன.

தமிழரின் உணவு, பழக்கவழக்கங்கள், குடும்பமாக வாழும் ஒழுக்கம், பெரியோரை மதிக்கும் உயரிய பண்பு, தூய்மை என்பவை காலங்காலமாகப் போற்றப்படுபவை. தொல்காப்பியமும் திருக்குறளும் தமிழரின் அரும்பெரும் சொத்துக்கள். தமிழரின் பன்முகப் பண்பாட்டையும், விழுமியங்களையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதற்கு தமிழர் பாரம்பரியத் திங்கள் வாய்ப்பளிக்கிறது. தமிழினத்தின் வேர்களை விழுதுகள் அறிவதற்கு இம்மாத நிகழ்வுகள் முக்கியமானவை.


உலகளாவிய ரீதியில் இடம்பெறும் தமிழர் பாரம்பரியத் திங்கள் தமிழர் தாயகத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்குள்ள தமிழர் அமைப்புகளும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவைகளும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

**ஆதாரம் □ தமிழர் தகவல்.**






# "றோ"வும் தமிழரின் உரிமைப்போரும்




**- நீலன் -**

உலகத்திலுள்ள சக்தி வாய்ந்த ஒரு சில நவீன புலனாய்வு அமைப்புகளினுள் ”றோ”வும் (Research and Analysis Wing -RAW) ஒன்றாகத் திகழ்கின்றது. தெற்காசியப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்களுக்காக இந்திய அரசு 1968 இல் “றோ” அமைப்பை நிறுவியது. இந்த அமைப்பு இந்தியப் பிரதமரின் நேரடிப்பொறுப்பின் கீழ் புதுடில்லியில் லோதி வீதியிலுள்ள 13 மாடிக்கட்டடத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றது. இந்திய அரசு ஆரம்ப காலங்களில் “றோ” விற்கென இரண்டு கோடி (இந்தியப் பணம்) நிதியை ஒதுக்கியது. இன்று ஐயாயிரம் கோடி ரூபாய்களாக தொகை விரிவடைந்து, ஒரு பலமான நவீன உளவறியும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

தெற்காசியாவைப் பொறுத்தவரையில், சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் விஸ்தரிப்பு அல்லது பிராந்திய ஆதிக்க முனைப்புக்கள், இந்தியாவின் கேந்திர, பொருளாதார நலன்களை ஸ்திரப்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் பிரதான முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. இந்தியாவினது பிராந்தியப் பாதுகாப்பும், அயலுறவுக் கொள்கையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. இவைகள் இரண்டும் இணை கோடுகளாக செல்லக்கூடியதாக இருக்கின்றதனால் இவ் விடயங்களில் “றோ” முக்கிய கவனத்தை செலுத்தி வருகின்றது.

“றோ” சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஒவ்வொரு நகர்வையும் கண்காணித்தும், இந்திய நலனுக்கு ஏற்ப அயல்நாடுகளின் அரசியல் ஸ்திரத்தன்மையை பலவீனப்படுத்தி ஆட்டம் காணச்செய்தும் வருகின்றது. அயல் நாடுகளிலுள்ள இனச்சிக்கலின் ஊடாக அரசியல், இராணுவ, பொருளாதாரத் தளங்களில் சேதாரங்களை உண்டுபண்ணியும், சனநாயகத்திற்கான போராட்டங்கள் மூலம் அதன் அரசியல் ஸ்திரத்தன்மையை பலவீனப்படுத்தும் பின்கதவுக் காரியங்களை “றோ” செய்தும் வருகின்றது. பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசத்தை (கிழக்கு பாகிஸ்தான்) பிரித்தெடுப்பதற்கு

வங்களாதேச விடுதலை வீரர்களான முக்தி பாகினிக்கு பயிற்சியும், ஆயுதமும் வழங்கியது இந்தியா. "றோ" வினது உளவுச்சேவைச் சரித்திரத்திலேயே பாகிஸ்தானை வெற்றி கொண்ட மறைமுக நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது. பாகிஸ்தான் ஒரு தனியான, பலமான தேச அரசுப் பண்பை கொண்டிருந்தது. அது "றோ"வின் புலனாய்வுத் தந்திரோபாயப் பண்பினால் பாகிஸ்தான், வங்களாதேசம் என இரு நாடுகளாக 1971 இல் பிரிந்தன.

இந்த புலனாய்வு செயற்பாடுகளுக்குப் பின்னரும் இவ்விரு நாடுகளில் இத்தகைய மறைமுக வேலைகளிலிருந்து "றோ" தனது கைகளைக் கழுவி விடவில்லை. அது தனக்குச் சார்பான உளவு வட்டத்துக்குள் நுழைவதற்காக வங்காளதேசத்திலுள்ள மதச் சார்பற்றவர்களுக்கும், இந்து சிறுபான்மையினருக்கும் மறைமுக ஆதரவுகளை வழங்கி இருக்கின்றது "றோ". கழுகுக்கண் கொண்டு கூர்ந்து அவதானித்துக்கொண்டிருக்கும் பாகிஸ்தானிலுள்ள சின்ட், புன்சாப் பிரிவினரிடையேயுள்ள பல்வேறு இனக்குழுக்கள், கருத்து முரண்பாடுடையவர்கள் மத்தியில் விரிவான உளவு வலையமைப்பை அமைத்துள்ளது "றோ". இதனைவிடவும் பாகிஸ்தானில் உளவு பார்க்க திறமையான இந்து உறுப்பினர்களை ஆர்.எல்.எஸ் மூலம் ஆள் திரட்டல்களைச் செய்து அவர்களுக்கு உளவுப் பயிற்சிகளை வழங்கிக் களத்தில் இறக்கியுள்ளது.

உலகில் வல்லரசுகளின் பல்போட்டியில், சமநிலை ஏற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படும் உளவுச் செயல்கள் உளவு வரலாற்று ஏடுகளில் தனித்துவம் வாய்ந்ததாகும். இவ்வாறுதான் சர்வதேச ஆதிக்க சக்திகளின் கைகள் இலங்கைக்குள் உள்நுழையத் தொடங்கின. இந்தியா இலங்கையை தனது செல்வாக்கினுள் கொண்டு வருவதற்காக, ஏனைய வல்லரசுகளைப்போல் தமிழர் தேசிய இனச்சிக்கலை கையாளத் தொடங்கியது. இந்தத் தந்திரோபாயப் பண்பு அடிப்படைக் கொள்கையின் அத்திவாரத்தில் இருந்து கொண்டு "றோ" தமிழ் இளைஞர்களின் தீவிரவேட்கை உணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்டது. உயர்பாதுகாப்பு நிலையங்களான புதுடில்லியிலுள்ள சக்ராட்டாவிலும், மையங்களை அதற்குரியவாறு உருவாக்கி ஐந்து தமிழ் குழுக்களுக்கு பயிற்சிகளை வழங்கியது இந்தியா.

தமிழரின் வரலாற்று பூர்வமான அரசியல் நெருக்கடியை நல்லிணக்கப் போக்குடன் மாத்திரம் அணுகவேண்டிய நியாயம் அல்லது தேவை இருந்தபோதும் "றோ" இந்திய நலன்களுக்கான



உணர்வுகளுடன் அந்த நெருக்கடியை அணுகத் தலைப்பட்டது. இதுவே எல்லாக் குழப்பத்துக்கும் அடிப்படையாக அமைந்தது.

தமிழரின் இனச் சிக்கலை சரிவரப் புரிந்துகொள்ளாமல், தொலை நோக்குப் பார்வையெல்லாம் இல்லாமல், உயர் குழாமினரின் விருந்து உபசார மேசையில் கதைக்கப்படும் விடயங்களை மட்டுமே ஆய்விற்கு எடுத்துத் திட்டங்களை வகுத்து வருகின்றது "றோ". இந்தக் குறுகிய வெளிப்பாட்டில் ஏற்பட்ட ஒருவகைப் பண்பு மாற்றமாகத்தான் "றோ" புலிகள் இயக்கத்திலிருந்து தமிழர் உரிமைப் போராட்டத்தின் முன் நோக்கிய வீறு நடையைத் தடுத்து நிறுத்துவதற்கு தன்னாலான சகலதையும் செய்தது. ஆனாலும் புலிகள் பலம்பெற்றனர். தமிழரின் படையான புலிப்படை பலமாகியபோதே சிங்கள ஆளும் உயர்பீடம் நிலை குலைந்துபோய் இந்திய அரசின் காலடியில் சென்று விழுந்தது.

புலிகளின் பலம்தான் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் செய்ய வழி வகுத்தது. இந்த யதார்த்த அரசியல் களநிலைவரங்களை பகுத்துணரும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள், புலிகளின் தொடர்ச்சியான போராட்ட வரலாற்று நீட்சி காரணமாக உள்ள தமிழரின் அங்கீகாரத்தை ஏற்றுக்கொள்ள பின்நிற்பது அல்லது தயங்குவதே கவலையானது. தமிழர்களில் அநேகர் வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலை இருந்தது. அந்த நேரத்தில், இந்திராகாந்தி இறந்ததும் தமிழர்கள் ஒவ்வொருவரும் தனது தாயை இழந்தது போலவே சோகத்தினுள் மூழ்கியிருந்தார்கள்.

இப்படியான தமிழர்களின் நல்லிணக்க உறவுப் போக்குகளை புரிந்துகொள்ளாது தமிழர்களுக்கு "றோ" உயர் பீடமும், இந்தியக்கொள்கை வகுக்கும் உயர்பீடமும், இந்திய அரச உயர்பீடமும்,

துன்ப துயரங்களைக் கொடுத்தது. சிங்கள தேசத்தை மாறி மாறி ஆட்சிசெய்யும் ஆளும் தரப்பினர் எல்லோரும் இந்திய நலனுக்கு விரோதமான அரசியல், இராணுவ, பொருளாதார கொள்கைகளையே கடைப்பிடித்து வந்துள்ளனர். வருகின்றனர். அதாவது நீல நிறக் கட்சிக்காரர்கள், பச்சை நிறக் கட்சிக்காரர்கள், சிவப்பு நிறக் கட்சிக்காரர்கள் என அனைவரும் இந்தியாவிற்கு சார்பான போக்குகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை எந்தவொரு ஆய்வுகளையும் செய்யாமலே வெளிப்படையாக "றோ" உயர் பீடத்தினர் தெரிந்து வைத்திருந்தனர்.

1987 இல் ஜே.ஆர். ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டிகளை இங்கு பார்த்தால், உண்மையொன்று "றோ"வுக்கு முன்னால் விரிந்து கிடக்கிறது. அதாவது,

"இதுவரை காலமும் புலிகளும், சிங்களப் படையினரும் சண்டை பிடித்த போது இந்தியா மத்தியஸ்தம் வகித்தது.. இப்போது புலிகளையும், இந்தியாவையும் மோத விட்டு சிங்கள தேசம் மத்தியஸ்தம் வகிக்கிறது.., சிங்களவர் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார்கள். இப்போதுதான் சிங்களவரைப் பாதுகாத்து இந்தியர்களை இரத்தம் சிந்த வைத்துள்ளேன்" என்றார் ஜே.ஆர்.

அதற்கு அப்பால், ஜே.ஆர். கண் முன்னால் இந்தியப் பிரதமர் எதிர்ப்புணர்வு மிக்க சிங்களக் கடற்படையால் தாக்கப்பட்டு உயிர்தப்பிய நிகழ்வு நடந்தது. இப்படியாக சிங்களவர்களிடையே இந்திய எதிர்ப்புணர்வு ஆழமாகப் புரையோடி இருக்கும் சிங்கள தேசத்தின் இறைமையின் பாதுகாப்பிற்காக "றோ" உதவ முன் நிற்பது தமிழரின் வரலாற்று பூர்வமான அரசியல் இறைமையின் பாதுகாப்பை அசட்டை செய்வது தமிழருக்கு கவலை தரும் நிகழ்வாகும்.

"றோ" தமிழரின் உரிமைப் போரை குறைத்து மதிப்பிடும் மனப்பாங்குள்ள முகவர் வட்டத்தினரால் வழங்கப்படும் தகவல்களையும் தமிழரின் உரிமை பற்றி சிங்கள உயர் குழாம் வட்டத்தினரால் திணிக்கப்படும் தகவல்களையும் மீள்பரிசீலனை செய்து







தமிழர் தொடர்பான கொள்கை மீளுருவாக்கம் செய்யப்படும்போதே இந்திய அரசு நடுநிலை வகிக்க முடியும்.

"றோ" வின் வான் பறப்பியல் ஆய்வு மையம் (Aviation Research Center -ARC) சுறு சுறுப்பாக இயங்குகின்றது. கப்பல்களை கண்காணிக்க "றோ" அமைப்பின் 2ஆவது பிரிவினர் ஒரிசாவில் டொனியர் (Donier) கடல் கண்காணிப்பு விமானத்தை உபயோகிக்கின்றனர். தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் புலனாய்வுத் தகவல்களை வழங்கும் இணைப்பு நிலையமொன்றை நிறுவி, இணையம் (Internet), மின்னஞ்சல் (E-mail), செய்மதி வழித் தொலைபேசி (Inmarsat) வழித் தகவல்களைக் கண்காணித்தும் வருகின்றது.

இதுபோன்ற நவீனத்துவ வசதிகளைத் தாங்கிய பலம்மிக்க "றோ" இந்தியாவினுள் ஊடுருவி உளவுவேலை செய்ய எத்தனிக்கும் எந்தொரு சதுரங்க ஆட்ட நகர்தலையும் முறியடித்து வருகின்றது. ஆனாலும், சிங்கள தேசத்தில் ஆதிக்க சக்திகளின் ஊடுருவல்களை தடுக்க எவ்வளவோ முயன்றும் "றோ" வினால் வெற்றிபெற முடியவில்லை. சிங்கள தேசம் இந்தியாவோடு இணைந்து நடித்த நாடகத்தின் திரையை உயர்த்தி, தனது உண்மை ரூபத்தை வெளிப்படுத்தியபோதிலும் இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் சிங்கள இறைமைக்கு, குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு தமிழர் சார்புநிலை அரசியல் பணிகளையும் இந்தியா செய்யாது என்கிற அடிப்படையில் கருத்து வெளியிட்டிருந்தார்.





இந்தியக்கொள்கை வகுப்பாளர்கள் நடுநிலை வகிக்கும் கண்ணோட்டத்தோடு, தமிழரின் உரிமைப் போரை அணுகும் அரசியல் பண்போடு தங்களை அர்ப்பணிக்க வேண்டும். அதனை விடுத்து சிங்கள உயர் குழாமோடு ஒட்டி உறவாடித் தகவல்களைப் பெறும் நிருபமா, நாராயணன், முனி போன்ற “றோ” உயர்மட்டத்தினரின் ஆலோசனை கேட்கும் பட்சத்தில் இந்திய அரசை மீண்டும் தவறான பாதைக்கு அழைத்துச் செல்வதாகவே முடியும். மத்திய கிழக்கு நாடுகளினுள் இஸ்ரேல் தேசம் பலமாக இருப்பதனாலே அமெரிக்கா நலனுக்கு நன்மை பயக்கும் என்கிற அடிப்படைக்கொள்கையில் அமெரிக்கா இஸ்ரேலை அங்கீகரித்து அத்தேசத்தை பலமாக்கியுள்ளது.

இந்த வரலாற்றுப் பாடத்தை இந்திய வகுப்பாளர்கள் கற்றுக்கொண்டிருந்த போதிலும் தமிழர் தாயக விடயத்தில் “றோ” வினது தவறான அணுகுமுறைப்போக்கை மாற்றியமைக்காது இருப்பது அறிவுபூர்வமான அரசியல் பண்பிலிருந்து விலகி நிற்பதாக அமைகின்றது.


இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்தாக்கம் தமிழர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் இன்றைய சோகமான சூழலில் சிங்களதேசமும், ஆதிக்க சக்திகளும் பூகம்ப அரசியலைப் பயன்படுத்தி தங்களது இராணுவ நலன்களையே முதன்மையாகப் பேணி வருகின்றது.

சிங்கள தேசம் இந்தியாவினது இறைமையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காது இந்திய நலனுக்கு பாதகமான நிலைப்பாட்டினை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை அரசின் இன்றைய பூகம்ப அரசியல் சூழலை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு தமிழரின் உரிமைப் போரை பலவீனப்படுத்தும் மறைமுக பணிகளிலிருந்து “றோ” தனது கைகளைக் கழுவிவிட வேண்டிய நிலை ஒன்று உதயமாகியுள்ளது.

தமிழர் உரிமைப் போராட்டம் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களுக்குள் சென்றுவிட்ட அரசியற் சூழ்நிலையிலும், தமிழர் எந்ததொரு தீர்வை எட்டாத போதிலும் தமிழர்படை பலமாகவே உள்ளது. இந்தப் பலத்தை பலவீனமாக்கும் “றோ” வின் உளவுச் செயற்பாடுகளால் தென்னிந்திய பிராந்திய பாதுகாப்பிற்கு எவ்வித நன்மையையும் பெற்றுக் கொடுக்கப் போவதும் இல்லை. அது தர்மமாகவும் இருக்கப்போவதும் இல்லை.

ஆகவே, இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தமிழரின் தொன்மையை ஏற்றுக்கொண்டும் தமிழரின் உரிமைப்போரின் நியாயத்தை புரிந்துகொண்டும், தமிழரின் துன்ப துயரங்களை மனிதாபிமானமாக அணுகியும் செயலாற்றக்கூடிய கொள்கைக்கு அத்திவாரம் இடவேண்டும். இதுவே தமிழர் தாயக விடயத்தில் இந்தியாவை நடுநிலைப்படுத்த உதவும்.

**மறுபதிப்பு - ஈழநாதம் (2005)**




# ஈழத்துக் கவிஞருகளின் நவீன கதைகளில் போரும் போரியல் வாழ்வும்

அந்துவன் கீரன்

ஈழத்து நவீனகவிதைகள் புறநானூற்று வீரத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. "கெடுக சிந்தை கடிதிவடுணிவே" என்னும் ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் வரும் தாய் முதிய மறக்குடியில் பிறந்தவள். இவளின் தந்தை யானையைக் கொன்று தானும் மாண்டவன். இவளது கணவன் நிரைகளைப் பகைவர் கவர்ந்து செல்லாதவாறு தடுத்து மாண்டவன். அச் சமயம் போருக்கு எழுமாறு பகைவரின் பறையொலி கேட்கிறது. மறப்புகழ்பாற் விருப்பம் கொண்ட அப்பெண் தனக்கிருந்த ஒரேயொரு புதல்வனைக் குடும்பியில் எண்ணை வைத்து வெள்ளிய ஆடையுடுத்தி, போருக்கு அனுப்புகிறாள். இத்தாய்க்கு நிகர்த்த வீரத்தை அ.காந்தாவின் "எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த" என்னும் கவிதையில் காணலாம்.

" அவனை விதைத்த
அடுத்த கணம்
அதோ அடுத்தடுத்துள்ள
கல்லறைகளை நோக்கி
ஓடின கால்கள்.
கண்ணீர் பூக்களைத்
தூவின கைகள்.
எந்த மகனுக்காய்
என் கால்களை நகர்த்த?
நேற்று விதையுண்டு போன
மூத்தவனுக்கா?-இல்லை
இப்போதுதான்
விதைக்கப்பட்ட என்
இளைய குஞ்சுக்கா?"

இழப்புக்களைத் தாங்கித் தாங்கி நிமிர்கிறது நம் தேசம். இன்று உள்ளவன் நாளையில்லை. மண்ணுக்காக மரணித்தவன் மாண்ட பின்னரும் வாழ்கிறான். துயரத்தை நெஞ்சில் ஏந்தி கண்ணீரை விழியில் சேர்த்து தொடர்கிறது சண்முகநாதன் கலைமகளின் பயணம்.

"நேற்றுவரை
கண்ணெதிரே நின்று
கதை பேசிச் சிரித்த முகம் இன்று
காவியமாய்ப் போனது.
நிஜமும் நிழலாகிப் போக
நீங்க முடியாத
நினைவுகளால்
நிறைக்கப்பட்ட
இதயத்தின்
விழி வழியே
நினைவின் துளிகள்
...... இன்னமும் இரண்டு
மணித்துளிதான்.
நேற்றைய உன்னைப்போல்
இன்று உன்னருகில்
நான்.
கந்தகச் சுமையை
கட்டியணைத்தபடி
உன் தடம் பட்ட
மண்ணெடுத்து
முத்தமிட்டு
இலக்கு நோக்கி
தொடர்கிறது
என் பயணமும்"

உடலில் வெடி குண்டினைக் கட்டிச் செல்லும் உன்னத ஆத்மாவின் பதிவும் பார்வையுமாக வெளிப்படும் இக்கவிதை தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியது. படிப்போர் மனங்களில் கண்ணீரைச் சொரியச் செய்யும் இக்கவிதைகள் நெய்யப்பட்டவையல்ல. இதயத்திலிருந்து வார்க்கப்பட்டவை.

தற்கொடைப் போராளிகளுக்கு கல்லறைகள் கிடையாது. அவர்களின் சடலங்கள் உரிமை கோரப் படுவதில்லை. சுவடு தெரியாமல் அவர் இருப்பு மறைக்கப்படும். இவ்வாறு தற்கொடைப் போராளியாய்ப் போய் உடல் சிதறி வெடியுண்டு சிதைந்து கிடக்கும் தோழியைப் பாடும் பெயரிடப்படாத நட்சத்திரங்கள் என்னும் கவிதை உள்ளத்தை உடைய வைக்கிறது.

"அன்பான தோழி
நீயும் இல்லை
உனக்கு கல்லறையும் இல்லை
கண்ணீர் விட்டு
அழமுடிந்தும்
பெயர் சொல்லி அழ முடியவில்லை.
தோழி!உன் சாதனை உன்னதம். .....
பெயரிடாத நட்சத்திரமே!
பல்லாயிரம் நட்சத்திரங்களில்
உன்
பிரகாசம் மட்டும்
என் கண்ணைப் பறித்துக் கதை
சொல்லுகின்றது...."

பெண்ணுடல், பெண்மொழி என்னும் கருத்துருவங்கள் வலுவடைந்த நிலையில் நுட்பமான வார்த்தைப் படிமங்களுக்கூடான அனுபவ உலகமாக விரியும்.

பஹீமா ஜஹானின் கவிதைகள் முஸ்லீம் தமிழ் இனத்துவத்தின் உறவுப்பாலமாகும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் இருந்து விலகி தமிழ்த் தேசியத்தின் ஆதரவுக் குரலாய் விளங்கும் பஹீமா ஜஹானின் கவிதைகள் போரின்வலி, அடக்குமுறைக்கு எதிரான தார்மீகக்கோபம், இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு, மனிதமனங்களுக்கு இடையிலான உறவு முதலானவற்றைப் பேசுகின்றன. சிறந்த குறியீட்டு உத்திகளைக் கையாண்டு தமிழ்க் கவிதைகளை நவீன தளத்துக்கு இட்டுச் சென்ற கவிதா ஆளுமைகளுள் ஒருவரான பஹீமா ஜகான் தமிழருக்கெதிரான ஒடுக்குமுறைகளையும் அவர்களின் வாழ்வியல் அவலங்களையும் பாடியவர். விடுதலைப் போராட்டத்தின் தீவிரப் போக்குகள் தமிழ் முஸ்லிம்களிடையே விரிசலை ஏற்படுத்திய காலப் பகுதியில் தமிழ் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். விடுதலைப் போரில் தன்னுயிர் ஈந்த போராளியைப் பாடும் ஒரு கடல் நீரூற்றி என்னும் கவிதை ஈழத்தின் நிகழ் காலப்பதிவுகளில் ஒன்றாகும்.

"அலையெழுப்பும் கடல் பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென விடை
பெற்றுப்போனாய்
வாழ்த்தச் சொல்ல வாயெழவுமில்லை
ஆரத்தழுவிட
நீ
விரும்பவுமில்லை
வெளியே பெய்த மழை என் கன்னங்களில்
- வழிந்தோட
மழைப்புகாரினூடே மறைந்து போனாய்
திரைகடல் சென்ற திரவியமானாய்
ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது...
நீ
திரும்பி வரவே இல்லை
இன்று வீரர்கள் துயிலும் சமாதிகள் மீது
காலத்துயரின் பெருமௌனம்
கவிழ்ந்துள்ளது
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவளே !
இங்கு ஏதுமற்ற உன்கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரம்பிடவோ"

வீரம் நிலத்தை ஆக்கிரமித்தது. நிலத்தை வென்றது. உயிர்களைப் பலி குடித்து உடல்களைச் சிதைத்த போதும் வீரம் பேசப்படும். அன்று தொடக்கம் இன்றுவரை அது வரலாற்று உன்னதமாகச் சித்தரிக்கப்படும். இவ்வகையில் ஆனையிறவு வெற்றி மகத்தான வெற்றியாக கருதப்பட்டு "ஆனையிறவு" என்னும் கவிதைத் தொகுப்பை ஈழத்துக்கு அளித்தது. வீரத்தின் வலிகளைத் தாங்கி உப்புக் காற்றுத் தழுவிய சாலையில் "ஆனையிறவு" எழுந்து நிற்பதை அலையிசையின் 'ஆக்கிரமிப்புச் சின்னங்களைத் தாங்கிய பூமி உலகறியக் கூவும் பிரச்சார விளைநிலம் வெறித்தனத்தின் உச்சம் சிதற விழித்திருந்தது.'

(ஆனையிறவு, பக் 41) என்னும் எழுச்சிமிக்க வரிகள் காட்சிப் படிமங்களுக்கூடாக உயிரோட்டம் பெறுகின்றன. யுத்தம் ஏற்படுத்தும் உணர்வும் வலியும் கொடுமையானவை. வன்மம் கொள்ளும் இக் கொடியயுத்தம் தவிர்க்கப்படவேண்டும். ஒடுக்குமுறையையும் போரியலையும் தாண்டிப் புதிய வெளிகள் திறக்கப்படுவதுடன் போரற்ற நிம்மதியான வாழ்வை அவாவிநிற்கும் கவிதைகளை இக்கால

த்துக் கவிஞர்கள் கோரி நின்றனர். பிற்காலத்தில் எழுந்த ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள் பல, போரின் மீதான கடும் விசனத்தைப் பாடின.

"யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை
குண்டுமழைக் குளிப்பில்
குருதியுறைந்த வீதிகளில்
நிணவாடை கலந்த சுவாசிப்புக்களில்
வெறுப்படைகின்றேன்.....
மனிதர்களின் கோரச் சாவு கண்டு என்
மனம் குமுறுகின்றது
துப்பாக்கி முழக்கத்திடையே
விழித்துக்
கொள்ளும் ஒவ்வொரு காலையையும்
என்னால் ரசிக்க முடியவில்லை
வசந்தம் கருகிப்போன வருடங்களாய்
விரிந்துள்ளது எம் வாழ்வு...."

'நான் எப்போதும் மரணிக்கவில்லை' என்னும் அம்புலியின் இக்கவிதை வசந்தத்தைக் கருகச் செய்த யுத்தத்தை எள்ளி நகையாடுகிறது.

பெண்ணியத்தின் தீவிரப்போக்கைக் கருத்தாடல்களுக்கு ஊடாக உள்வாங்கிய பெண் கவிஞைகள், போர் ஏற்படுத்திய வலி, உணர்ச்சி, அதன் தாக்கம் ஆகியவற்றை ஆழமான மொழிச் சொல்லாடல் படிமக்குறியீட்டுக் கருத்துருவாக்கங்களின் வழி அனுபவங்களை, நவீன கவிதைகளாக உருவாக்கினர். இக்காலப்பகுதியில் இலக்கிய மீட்டுருவாக்கத்தின் மூலம் பெண்ணிற்கான ஒரு புதிய வெளியை ஈழத்தின் போரியல் கவிதை திறந்தது. இங்கு பெண் மொழி என்பது ஒடுக்கப்பட்ட பெண்ணுடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, ஆகியன உள்ளிட்ட அகநிகழ்வுகள் சார்ந்து உருவாகின்றது. பொதுவாக தான் சார்ந்த சூழலோடு முனைப்பு பெறும் இப்பெண் மொழியானது பிரத்தியேக மனப் படிமங்களுக்கூடாகப் பால் சார்ந்த தனித்த அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. ஈழத்தின் பெயரிடப்படாத நட்சத்திரங்களின் வாழ்வியல் சுவடாக ஒளிர்ந்து, தனித்துவமான உணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் பதிவு செய்யும் இக்கவிதைகள் சமுதாய வாழ்வு பற்றிய தெரிநிலை விழிப்பினை ஊட்டி நிற்பவை. நிலை பிரமாணமாய் எழுந்து என்றும் எப்போதும் அழியாது நிலைத்து நிற்பவை.

## திரும்ப முடியாத நகரம்

- தீபச்செல்வன்

என் நகரத்தின் கடைசித் தருணம்
அதுவென நினைத்திருக்கவில்லை.
உன்னை முத்தமிடுகிறபோது
அது கடைசி முத்தமெனவும்
நினைத்திருக்கவில்லை.
போருக்கான வார்த்தைகள்
எழுதப்பட்ட நகரத்தில் உன்னை
தனியே விட்டு வந்தேன்.

எப்படி பிரிந்து போயிற்று என் தெரு?
இழப்பின் கொடுமையை
நீதான் முழுமையாகச் சுமந்திருப்பாய்.
நான் உன்னை இழந்து
தனிப் பறவையாய் வீசப்பட்டேன்.

நமக்கு மேலால் நின்ற நாவல் மரம்
முறிந்து போனதை
நீ எனக்குச் சொல்லாமலே விட்டிருந்தாய்.
நிழலற்றுத் திரிகிறதை
நான் காணமுடியவில்லை.
நாம் நாவல் மரத்தை இழந்திருக்க
அது வௌவால்களை இழந்துபோயிற்று.

விமானங்கள் வீடுகளைக்
கவ்விக்கொண்டு போகிறதாக
நான் கனவு கண்டெழும்புகையில்
நீ நமது நகரத்தில் இருந்து
துரத்தப்பட்டாய்.
காலையென்பது இழப்புடன்
தொடர்ந்து விடிகிறது.

எனது பேருந்து திரும்பவில்லை.
காத்திருப்பில் நீ அலைகிற துயர்மிகு
தெருக்களில் நான் திரும்பவில்லை.
போர் உன்னை
என்னிடமிருந்து பிரித்துவிட்டது
யாரிடம் நான் சொல்ல.

உன்னை ஷெல் தின்றுவிட்டது.
ஆயுதங்கள் மேலும் குவிக்கப்படுகையில்
போர் தொடரப்படுகிறபோது
வரைபடங்கள் மேலும்
அவதானிக்கப்படுகிறபோது
நம்மைக் குறித்து என்ன இருக்கிறது?

உன்னிடமும்
நமது காதல் நகரத்திடமும்
நான் திரும்பப்போவதில்லை.
திரும்பாத நகரத்தை
நாம் இழந்துவிட
நகரம் நம்மை இழந்திருக்கிறது.
நகரமிட்ட முத்தம்
இன்னும் காயாமலிருக்கிறது.

## ஒரு மயானமும் காவல் தேவதைகளும்

- பஹீமா ஜஹான்

சுழலுமிச் சோகச் சூழலிடை
உனக்கென எதையெழுத?
ஆடிப் பாடிப் பின் அவலம் சுமந்து நீங்கிய
சோலை வனத்தைத் தீயின் நாவுகள்
தின்று தீர்த்தன
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த
வயல் வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுருவித் தகர்த்தன
எஞ்சிய எமது பள்ளிவாயில்களும்
அசுத்தமாக்கப்பட்டன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள் வீழ்ந்தழிந்திட
பேய்கள் உலவிடும் பூமி மாத்திர்
தரிசு தட்டிக் கிடக்கிறது
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளிர்த்திடுமினி?

யாருமற்ற பாழடைந்த நகரத்தின்
இடிபாடுகளினூடு
சூரியன் தயங்கித் தயங்கித் தலை நீட்டும்
போர் தின்ற பூமியில் வீழ்ந்திடும் கிரணங்கள்
ஒருதலைமுறையின் தலை விதியை
ஊமையாய்ப் படிக்கும்
அந்திப் பொழுதில் பயமும் பீதியும்
தொண்டைக் குழியை
நெரித்திடப்
பூதங்களின் காலடியோசை கேட்டுச் சூரியன்
நடுநடுங்கி
மறையும்
தளைகளை வெட்டியெறிந்திடப்
புறப்பட்ட விடுதலைப்
பிரவாகம் எமை வீடு துறக்க வைத்தது
நீ வாழ்ந்த தேசம் இன்றுனை
எந்தப் பாடலைக் கொண்டும் வரவேற்கும்
நிலையிலில்லை!

நானும் நீயுமன்றி
இந்தப் பரம்பரையே தோள்களில் சுமையழுந்திடத்
திசைக்கொவ்வொன்றாய்ச் சிதறுண்டு போனது
கல்வியும் உழைப்பும் கனவுகளை மெய்ப்பித்திட
ஆனந்தம் பூரித்த நாட்கள் இனியில்லை
பாழடைந்த படகுத் துறைகள்...
காடடர்ந்த பயிர் நிலங்கள்...
தலைகருகிய கற்பக தருக்கள்...
தரைமட்டமாகிப் போன எங்கள் குடிமனைகள்...
எல்லாம்
பேய்கள் சன்னதம் கொண்டாடிய கதையினைச்
சொல்லும்

அவசரப்பட்டு நீ
ஊரைக் காணும் ஆவலிலிங்கு
சோலை நிலத்தினூடு
அணிவகுத்துச் செல்லும் காவல் தேவதைகள்
அமைதியைப் பேணுகின்றன
அந்த ஏகாந்தம் குடியிருக்கும்
மயானத்தைக் காண
உனக்கென்ன ஆவல்
வந்து விடாதே

முற்றும்

# மார்கரெட் ட்ராவிக் (1948 - 2022)




அண்மையில் காலமான அமெரிக்கப் பெண் மணி மார்கிரெட் ட்ராவிக் மானுடத்தில் அக்கறை கொண்ட ஒரு மானுடவியலாளர் மட்டுமல்ல, அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும் அடக்கப்படும் இனங்கள் மீதும் அளவு கடந்த அனுதாபம் கொண்டிருந்தார். நியூசிலாந்தின் மாசி பல்கலைக் கழகத்தில் ஒரு மானுடவியல் விரிவுரையாளராக இருந்த போது, அவர் பிஹச்டி ( PhD ) செய்து கொண்டிருந்தார். தமிழ் சமூகத்துக்கிடையில் இருக்கும் பாசம், அன்பு, காதல் என்ற கருப்பொருளை அவர் ஆய்வறிக்கைக்காக தெரிவு செய்திருந்தார். இதற்காக அவர் எமது தாயகத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் பல மாதங்களைச் செலவிட்டு, தமிழ் மக்க-





**விடுதலைப் புலிகளின் அனுதாபியாக மட்டுமல்லாமல், தாயகத்தில் நடைபெறும் அநீதிக்கு எதிரான குரலாகவும் இருந்ததால் மார்கரெட் சிங்கள அதிகாரிகளின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதித்திருந்தார்**

ளுடன் பல கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். ஆய்விற்காக பல தரப்பட்ட மக்களையும் அவர் அணுகி அவர்களில் ஒருவராக வாழத் தொடங்கியதுடன் அவருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான ஒரு பிரிக்க முடியாத பந்தம் உருவாகியது.

ஒரு பெரிய தமிழ்க் குடும்பத்துடன் தங்கியிருந்து குடும்பத்தின் உள்ளே ஊடாடும் பாசப் பிணைப்பை அவதானித்த மார்கரெட் அந்த சமயத்தில் இராணுவ அடாவடித்தனங்கள், அச்சுறுத்தல்கள் போன்ற நெருக்கடிகளுக்கு மத்தியில் தமிழ் இளைய சமுதாயம் உயிர் வாழ்தலுக்காகப் போராடுவதில் உள்ள நியாயத் தன்மையை கண்கூடாகக் கண்டார். தாழ்த்தப்பட்டவர்கள் பக்கம் எப்போதும் நிற்கும் மார்கிரெட் இதே காரணத்தினால் தமிழர்கள் மீது பச்சாதாபம் கொண்டார், ஊடகங்கள் பரப்புவது




போல் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளல்லர் என்ற உண்மைத் தன்மையை உணர்ந்து அவர்கள் மேல் அனுதாபம் கொண்டார். தன்னுடைய எண்ணக் கருக்களை சரியான முறையில் பதிவு பண்ணுவதற்கு உதவியாக அவர் தமிழ் சொற்களின் பதங்களையும் கற்றறிந்து கொண்டார்.

அந்த நேரத்தில், ஊடகவியலாளர் தராகி சிவராம் இவருக்கு ஒரு நல்ல நண்பராக இருந்து இவருக்குத் தேவையான உதவிகளை வழங்கினார்.

எமது தேசத்திலிருந்து குறிப்பாக ‘ரஜினி திரணகம’ போன்ற பட்டறிஞர்களும் எத்தனையோ வெளிநாட்டு படைப்பாளிகளும் எங்கள் உயிர் வாழ் தலுக்கான போராட்டம் பற்றிய படைப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவையனைத்தும் தங்கள் சுய எண்ணக் கருக்களைக் கலந்து வந்த ஒரு திரிபாகவே இருந்திருக்கின்றன. எமது மக்களின் வேதனைகளை, அவர்கள் பாலிருக்கும் நியாயத் தன்மையை எவரும் அம்பலப்படுத்தத் துணியவில்லை. மாறாக, ஆய்வுக்காக எழுதி புத்தகமாக வெளியிடப்பட்ட ‘தமிழ்க் குடும்பத்தில் அன்பு, பாசம், காதல் பற்றிய குறிப்புகள்’ ( Notes on Love in a Tamil Family ) என்ற மார்கரெட்டின் புத்தகம் பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தது. இது 1990 இல் வெளிவந்தது.

அதைத் தொடர்ந்து 2007 இல் வெளிவந்த ‘போர், குழந்தைப் பருவம் மற்றும் விளையாட்டு’ (Enemy Lines – warfare, childhood and play in Batticaloa) என்ற புத்தகம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு மூத்த உறுப்பினர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பற்றியும், அந்த சூழ்நிலைக்கான காரணம் பற்றியும் விபரித்திருந்தது. அந்த நேரத்தில் அவர்கள் குடும்பத்துடன் வன்னிக்கு இடம் பெயர்ந்திருந்தனர் என்றும் தெரிவித்திருந்தது.

2017 மே மாதத்தில் வெளிவந்த ‘தீண்டத் தகாத பெண்கள் உலகை உருவாக்குகிறார்கள்’ (Untouchable Women Create the World) என்ற புத்தகம் கீழ்நிலைக்குள் தள்ளப்பட்டுக் கிடக்கும் பெண்களின் எழுச்சியுறு நிலையை வெளிப்படுத்தி நிற்கிறது.

விடுதலைப் புலிகளின் அனுதாபியாக மட்டுமல்லாமல், தாயகத்தில் நடைபெறும் அநீதிக்கு எதிரான குரலாகவும் அவர் இருந்ததால் மார்கரெட் சிங்கள அதிகாரிகளின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதித்திருந்தார். ஒரு தடவை, நியூசிலாந்துக்கான இலங்கைத்தூதுவர் மார்கரெட் விரிவுரையாளராகப் பணிபுரிந்த மாசி பல்கலைக்கழக துணை வேந்தருக்கு கடிதம் ஒன்றை காட்டமாக எழுதியிருந்தார். அதில், ‘இலங்கை தொடர்பான பரப்புரைகளைச் செய்வதை விடுத்து மார்கரெட் ஒழுங்காக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்’ என்ற எச்சரிக்கைத் தொனியிருந்தது. அவற்றைப் புறந்தள்ளிய மார்கரெட் தனது ஓய்வுக் காலத்தை வன்னியில் கழிக்க விரும்பினார்.

ஆனால், அமெரிக்காவில் நோய்வாய்பட்டு சிலகாலம் இருந்த மார்கரெட் ட்ராவிக் அண்மையில் இயற்கையெய்தினார்.

ஈழத் தமிழர்களின் நிலையை வெளிக்கொணர்ந்த ஒரு அனுதாபியை இழந்து நிற்கிறது தமிழினம். இது எங்களுக்கு ஒரு இழப்பு. அவருக்கு தலைவணங்கி எங்கள் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

**- கோற்றவை**

# தொடரும் சீரழிவுக் கலாசாரம்



ஆயுதப் போராட்டம் நடைபெற்ற மூன்று தசாப்தங்களிலும் எம்மக்கள் எதிரியின் குண்டுவீச்சுகள், இடப்பெயர்வுகள், பொருளாதார த்தடை என்று பல்வேறு இன்னல்களைக் கடந்து வந்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு ஒழுக்கமான சமுதாயமாக வாழ்வை நகர்த்திச் செல்ல அவர்கள் தவறவில்லை. குற்றங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததுடன், குற்றம் அல்லது சமுதாய ஒழுங்கு சீர்குலைக்கப்படும் நிலை எங்கு எழுந்தாலும் அதனைத் தட்டிக் கேட்டு சீர்செய்யும் சமுக விழிப்புணர்வு எல்லோரிடத்திலும் இருந்தது. பெற்றோர் - பிள்ளைகள் - ஆசிரியர் இடையேயான உறவு வலுவானதாக இருந்தது. இதனால் பிள்ளைகள் வழி தவறிச் செல்லும் வாய்ப்பு குறைவாகவே இருந்தது.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னும் எதிரியின் மறைமுக இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. இது எதிர்பார்க்கப் பட்டதுதான். இந்திய இராணுவம் எமது மண்ணில் கால் பதித்த போதுகூட நீலப்படங்கள், போதை வஸ்து, பாக்கு, பாடசாலை மாணவியரை விபசாரத்தில் ஈடுபடுத்துவது, என்று எமது இளைய சமுதாயத்தை அழிக்க பகீரதப் பிரயத்தனம் செய்தது. இயக்கம் போதித்த அறம் மட்டுமல்லாமல் பெற்றோர், ஆசிரியர், உறவினர், ஊர்த் தலைவர்கள் என்று அத்தனைபேரின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் இந்த முயற்சியை முறியடித்திருந்தது.

இன்று, நிலைமை தலைகீழாக உள்ளது. எமதினத்தின் ஆணிவேரையே அரித்தெடுக்கும் ஒரு பாரிய பிரச்சனையாக கலாசாரச் சீரழிவு மாறியுள்ளது. ஊரின் நடுவே நடைபெறும் விபசார விடுதிகள், பள்ளி மாணவிகள் விபசாரத்தில் ஈடுபடுவது, பள்ளி



மாணவிகளின் - மணமாகாத இளம் பெண்களின் கருத்தரிக்கும் வீதத்தின் அபாயகரமான அதிகரிப்பு, தறிகெட்ட வாழ்க்கை முறை, சிறுவர் துஷ்பிரயோகம், வெட்டியாக ஊர்சுற்றும் இளைஞர் யுவதிகளின் கையில் தாராள பணப்புழக்கம், இளைய சமுதாயத்தினரின் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கைபேசி பாவனை, வாள் வெட்டு கலாசாரம், மது - போதைவஸ்து - பாக்கு பாவனை அதிகரிப்பும் அவை இலகுவாகக் கிடைப்பதும்.. என்று சீரழிவுப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இத்தனை ஆயிரம் இளைஞர்கள் யுவதிகள் தங்கள் உயிர்களைக் கொடுத்துக் கட்டிக் காத்த மண்ணின் அடிப்படை விழுமியங்களைக் கூட காப்

பாற்ற முடியாமல் எம் மக்கள் இருப்பதேன்? தென்னிலங்கை மக்களின் வருகை, வெளிநாட்டுப் பணம், வெளிநாட்டு மோகமும் அதனால் விளைந்த நாகரிகத் தாக்கமும் என்று காரணங்களைத் தேடியெடுத்துச் சொன்னாலும், எங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுத்து, அவர்களைக் கண்காணிக்கத் தவறி, கட்டற்ற வாழ்வுக்கு அனுசரணையாகவிருக்கும் பெற்றோர் இந்தப் பாரிய தவறுக்கு பொறுப்பேற்க வேண்டும். கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை வயது வேறுபாடில்லாமல், பெண்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்களாக உருவெடுத்துள்ளது.

அண்மையில் வடமராட்சி யுவதி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டது அதிர்ச்சிகரமான ஒரு கலாசார சீரழிவு. ஆண் பெண் இருபாலாரும் அளவுக்கதிகமான சுதந்திரத்துடன், கண்காணிப்பு எதுவுமின்றி இருந்தது சமுதாய கட்டமைப்பைக் கேள்விக் குறியாக்கி, எவருக்கும் பாதுகாப்பில்லை என்பதை வெளிக் கொணர்ந்திருக்கிறது. இதற்குக் காரணமான இரு பகுதியினரின் பெற்றவர்களும் என்ன செய்து கொண்டிருந்தனர்?

இப்போது தொலைக்காட்சி, 'யு ரியுப்', 'பேஸ் புக்', 'வாட்ஸ் அப்' போன்ற சமுக வலைத்தளங்கள் போன்றவற்றை பார்க்காதவர்களே இல்லை. பெண்களுக்கெதிரான இத்தகைய எத்தனை இழி செயல்களை அதில் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? இதைப் பார்த்த பின்பும் ஏன் உங்களால் எச்சரிக்கையாக இருக்க முடியவில்லை? உங்கள் குழந்தைகளை கண்காணித்து கண்டிப்புடன் வைத்திருக்க முடியவில்லை? சிறுவர்களின் கையில் விலையுயர்ந்த கைபேசிகளைக் கொடுக்கத் தெரிந்த நீங்கள் அதை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள், எங்கு போகிறார்கள், அவர்களின் நண்பர்கள் யார், அவர்களின் நடத்தையில் மாற்றம் தெரிகிறதா என்பனவற்றை அவதானிக்காமல் பெற்றோர்க்குரிய கடமையில் இருந்து தவறுவதேன்?





1. மேலதிக வகுப்புகள் என்று பிள்ளைகள் செல்லும்போது கண்காணிக்கப்படுதல்.

2. மட்டற்ற சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல்.

3. பிள்ளைகளின் நண்பர்களையும் அவர்களின் பெற்றோரையும் பெற்றவர்கள் தெரிந்து வைத்திருத்தல்.

4. ஆசிரிய - மாணவ நல்லுறவு பேணப்படல். பாடசாலைகளிலும் இளைய சமுதாயம் கூடும் இடங்களிலும் தொடர்ச்சியாக விழிப்புணர்வு போதிக்கப்படுதல்.

5. வேலையற்ற இளைஞர் யுவதிகளின் அடாவடித்தனங்கள் கட்டுப்படுத்தப்பட்டு அவர்கள் பிரயோசனமான செயற் திட்டங்களினுள் உள்வாங்கப்படல்.

6. ஆங்காங்கு முளைத்திருக்கும் 'லொட்ஜ்'கள் கடுமையான சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடத்தப்படல்.

7. பொது இடங்களை அண்மித்து மதுக்கடைகள் திறக்கப்படுவதை தடுத்தல்.

8. எல்லாவற்றிலும் மேலாக, பெண்களை மதிக்கக் கற்றுக் கொடுத்தல். இதன்மூலம் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் நடைமுறையிலிருந்து சமுதாயம் விடுவிக்கப்படும்.

9. சமுதாய சீர்கேடுகளை மூடி மறைக்காமல், அவற்றை வெளிக்கொணர்ந்து, விவாதித்து, அதற்கு ஒரு முடிவு காணல்.

10. நான், எனது குடும்பம் என்று இல்லாமல் சமுதாய புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து செயற்படுதல்.

என்று பாரிய பணி எம்முன்னே விரிந்து கிடக்கிறது. காலம் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் எங்கள் பிள்ளைகளுக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்து செயலாற்றுவோம்.

**- நாச்சியார்**




## காதலையும் திருமணத்தையும் ரகசியமாக வைத்துக் கொண்டது ஏன்?

காங்கிரஸ் கட்சியில் இருந்த சுபாஷ் சந்திர போஸ், உடல்நிலை காரணமாக 1934ஆம் ஆண்டு ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவிற்கு செல்ல நேரிட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தின் செயல்பாட்டின் போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்ட போஸின் உடல்நிலை 1932 ஆம் ஆண்டு பிப் ரவரி மாதத்தில் மோசமான நிலைக்கு சென்றது. எனவே, போஸ் குடும்பத்தின் கோரிக்கையை ஏற்ற அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை மேல் சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்கு அழைத்து செல்ல அனுமதித்தது. வியன்னாவில் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருந்தபோதிலும் ஐரோப்பாவில் உள்ள இந்திய மாணவர்களை ஒன்றிணைந்து சுதந்திரத் திற்காக போராடுவதற்கு அவர் முடிவு செய்தார்.

அதே சமயத்தில், போஸை அணுகிய ஐரோப் பிய பதிப்பாளர் ஒருவர் "இந்தியாவின் துயரம்" என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுத்துவதற்கு பணித்தார். அதை ஏற்றுக்கொண்ட போஸ் இந்த புத்தகத்தை உடனிருந்து எழுதுவதற்கு உதவியாகவும், அதை ஆங்கிலத்தில் தட்டச்சு செய்வதற்கும் ஒரு உதவியாளரை தேர்ந்தெடுப்பதற்கு முடிவு செய்தார்.

போஸின் நண்பரான டாக்டர் மாத்தூர் என்பவர் இதற்காக இரண்டு நபர்களை பரிந்துரைத்தார். அதி லுள்ள முதல் நபரை அழைத்து நேர்காணல் செய்த போஸ் இற்கு திருப்தியில்லை. எனவே, இரண்டாவ தாக 23 வயதான எமிலி சென்கல் என்ற பெண் நேர் காணலுக்காக அழைக்கப்பட்டார். எமிலியின் பேச் சில் நம்பிக்கை கொண்ட போஸ், அவரை 1934 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பணியில் சேர்த்துக் கொண்டார்.

1934 ஆம் ஆண்டு இந்த சந்திப்பு நடப்பதற்கு முன்புவரை 37 வயதான சுபாஷ் சந்திரபோஸின் முழு கவனமும் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலிருந்து இந்தி யாவை விடுவிப்பதிலேயே இருந்தது. அதுவரை, எமிலி என்பவர் தனது வாழ்க்கையில் பெரும் தாக்-கத்தை ஏற்படுத்த போகிறார் என்பதை அறியாமல் இருந்தார் போஸ்.

## போஸின் வாழ்க்கையை தாக்கிய காதல் புயல்

சுபாஷ் சந்திர போஸின் இளைய சகோதரரான சரத் சந்திரா போஸின் பேரனான சுகித் போஸ், "அவரது மாட்சிமை பொருந்திய நியமனம் - சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பேரரசுக்கு எதிரான இந்தி யாவின் போராட்டம்" என்ற தலைப்பில் புத்தகமொ ன்றை எழுதியுள்ளார். அதில், எமிலியை சந்தித்த பிறகு போஸின் வாழ்க்கை தலைகீழாக மாற்றம டைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.



சுபாஷ் சந்திர போஸ் இற்கு பல காதல் விருப்பங்களும், திருமணத்திற்கான பல வாய்ப்புகளும் வந்தன. ஆனால், அவர் யாரையும் ஆர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், எமிலியின் அழகு அவரை கவர்ந்துவிட்டது என்று அப்புத்தகத்தில் சுகித் போஸ் குறிப்பிட்டுள்ளார்.

சுபாஷ் சந்திர போஸே காதலை வெளிப்படுத்தியதாகவும், அவர் 1934 ஆம் ஆண்டின் இடைப் பகுதிலிருந்து 1936 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவேக்கியாவில் தங்கியிருந்த காலகட்டத்தில் அவர்களின் காதல் சிறப்பான நிலையை அடைந்தது என்றும் அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுபாஷ் சந்திர போஸ் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் வாழ்க்கையை ஒப்பிட்டு புகழ்பெற்ற கல்வியாளரான ருத்ரநாஷஜீ முகர்ஜி ஒரு புத்தகம் எழுதினார். பென்குயின் பதிப்பகம் வெளியிட்ட அப்புத்தகத்தில் போஸ் மற்றும் நேருவின் வாழ்க்கையில் அவர்களின் மனைவிகள் ஏற்படுத்திய தாக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுபாஷ் சந்திர போஸ் எழுதிய காதல் கடிதம்

தங்கள் காதலின் தொடக்க கட்டத்திலேயே இது மிகவும் வேறுபட்ட ஒன்று. கடினமான ஒன்று என்றும் அவர்கள் அறிந்திருந்தனர் என்பது அவர்கள் இருவரும் எழுதிக்கொண்ட கடிதத்திலிருந்து தெரிய வருகிறது. எமிலி அவரை திரு.போஸ் என்றும், போஸ் அவரை திருமதி. சென்கல் அல்லது ஷெல்லி என்று அழைத்தார் என்று அப்புத்தகத்தில் முகர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடிதங்கள் முன்னர் சுபாஷ் சந்திர போஸால் எமிலிக்கு எழுதப்பட்ட கடிதங்களின் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை. இந்த கடிதங்களை சரத் சந்திர போஸின் மகனான ஷிஷிர் போஸின் மனைவியான கிருஷ்ணா போஸிடம் எமிலியே நேரடியாக அளித்தவையாகும்.



"எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எனக்கு தெரியவில்லை. ஒருவேளை நான் எனது மீதி வாழ்க்கையை சிறையில் செலவிட நேரிடலாம், நான் சுட்டுக் கொல்லப்படலாம் அல்லது தூக்கில் தொங்கவிடப்படலாம். அதனால், நான் உன்னை நேரில் சந்திக்க முடியாமல் போக நேரிடலாம் அல்லது மீண்டும் கடிதத்தை எழுத முடியாமலும் போகலாம். இருப்பினும், நீ எப்போதுமே எனது இதயத்திலும், எண்ணத்திலும், கனவிலும் நிறைந்திருப்பாய். இந்த ஜென்மத்தில் நாம் இருவரும் ஒன்றாக சேர்ந்து வாழ முடியாவிட்டாலும், அடுத்த ஜென்மத்தில் உன்னுடன்தான் இருப்பேன்"

1936 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் தேதி எழுதப்பட்டுள்ள கடிதமொன்று இவ்வாறு தொடங்குகிறது, "என் அன்பே, தக்க நேரம் வரும்போது உறைந்த பனி உருக ஆரம்பிக்கிறது. ஆனால், இம்முறை எனது இதயம் உருகுவதைப் போன்று உணருகிறேன். நான் உன்னை எவ்வளவு விரும்புகிறேன் என்பதை உனக்கு கடிதங்கள் மூலமாக தெரிவிப்பதை நாம் நேரில் உரையாடுவதை போல என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. என் அன்பே, எனது இதயத்தின் ராணி நீதான். ஆனால், நீ என்னை விரும்புகிறாயா?."

"எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எனக்கு தெரியவில்லை. ஒருவேளை நான் எனது மீதி வாழ்க்கையை சிறையில் செலவிட நேரிடலாம், நான் சுட்டுக் கொல்லப்படலாம் அல்லது தூக்கில் தொங்கவிடப்படலாம். அதனால், நான் உன்னை நேரில் சந்திக்க முடியாமல் போக நேரிடலாம் அல்லது மீண்டும் கடிதத்தை எழுத முடியாமலும் போகலாம். இருப்பினும், நீ எப்போதுமே எனது இதயத்திலும், எண்ணத்திலும், கனவிலும் நிறைந்திருப்பாய். இந்த ஜென்மத்தில் நாம் இருவரும் ஒன்றாக சேர்ந்து வாழ முடியாவிட்டாலும், அடுத்த ஜென்மத்தில் உன்னுடன்தான் இருப்பேன்" என்று சுபாஷ் சந்திர போஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தின் கடைசியில், "நான் உன்னுள் இருக்கும் பெண்ணையும், ஆன்மாவையும் காதலிக்கிறேன். நான் நேசிக்கும் முதல் பெண்மணி நீதான்" என்று போஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும், இதை படித்

தும் கடிதத்தை அழித்துவிடுமாறு எமிலியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், எமிலி அதை பாதுகாப்பாக சேகரித்து வைத்துக்கொண்டார்.

எமிலி மீதான காதலில் சுபாஷ் சந்திர போஸ் தன்னை முழுவதுமாக இழந்துவிட்டார். இதுகுறித்து சுகித்திடம் பேசிய போஸின் நெருங்கிய நண்பரும் அரசியல் கூட்டாளியுமான ஏ.சி.என் நம்பியார், "சுபாஷ் ஒரு யோசனையுடன் இருந்தவர், இந்தியாவின் சுதந்திரத்தை பெறுவதில் மட்டுமே அவரது கவனம் இருந்தது." போஸின் அந்த எண்ணத்திலிருந்து திசை திரும்புவதற்கு ஒரே ஒரு வாய்ப்பு அவர் எமிலியை நேசிக்கும்போதுதான் ஏற்பட்டது. அவர் எமிலியை மிகவும் விரும்பினார்.

## திருமணம் நடந்ததா?

அதற்கடுத்த முறை சந்திக்கும்போது போஸ்உம், எமிலியும் திருமணம் செய்துகொண்டனர். தனக்கு 27 வயதிருக்கும்போது 1937 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் நாள் தங்களது திருமணம் நடைபெற்றதாக கிருஷ்ணா போஸிடம் பேசிய எமிலி தெரிவித்தார். அவர்கள், தங்கள் இருவருக்கும் விருப்பமான ஆஸ்திரியாவிலுள்ள இடத்தில் திருமணம் செய்துகொண்டனர்.


ஆனால், இருவரும் தங்களது திருமணம் பற்றிய தகவலை ரகசியமாக வைத்துக்கொள்ள முடிவு செய்தனர். எமிலி தங்களது திருமணத்தை தவிர வேறெந்த தகவலையும் கிருஷ்ணாவிடம் பகிர்ந்துகொள்ளவில்லை.

தனது அரசியல் வாழ்க்கையில் எவ்வித தாக்கத்தையும் சந்திக்க விரும்பாத காரணத்தினால் போஸ் தனது திருமண வாழ்க்கையை மறைந்திருக்கலாம் என்று முகர்ஜி நினைக்கிறார். வெளிநாட்டு பெண்ணை போஸ் திருமணம் செய்து கொண்டது அவரை பற்றிய மற்றவர்களின் பார்வையை மாற்றியிருக்கலாம்.

## இந்திய பத்திரிகைகளுக்கு எழுதிய எமிலி

இந்தியாவிலுள்ள சில செய்தித்தாள்களுக்கும், இதழ்களுக்கும் வியன்னாவில் இருந்தபடியே எமிலி எழுதவேண்டுமென்று போஸ் விரும்பியதாக கிருஷ்ணா போஸ் கூறுகிறார். தி இந்து, மாடர்ன் ரிவ்யூ ஆகிய பத்திரிகைகளுக்கு எமிலி எழுதியிருந்தாலும் அக்கட்டுரைகள் தனக்கு திருப்தியளிக்கவில்லை என்று போஸ் பலமுறை கூறியதாக தெரிகிறது.

1937 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 ஆம் தேதி எமிலிக்கு சுபாஷ் எழுதிய கடிதத்தில், "இந்தியாவைப் பற்றி சில கட்டுரைகளை நீ எழுதியுள்ளாய். ஆனால், இந்த புத்தகங்களை உனக்கு வழங்குவதற்கு தேவையுள்ளதென்று நான் நினை-


STATE

SUNDAY, FEBRUARY 18, 2001
DECCAN CHRONICLE, VISAKHAPATNAM

**Netaji as BJP idol okay: Anita**

*Says, father's ideals can be put into action for society's good*

FROM N VAMSI SRINIVAS

**Hyderabad, Feb. 17:** Anita Bose, daughter of Netaji Subash Chandra Bose, has given her stamp of approval to Bharatiya Janata Partry's attempts to project her father's ideals "so long as they do good for society".

"Whoever it may be and whatever party they may belong to, I do not mind as long as they put sincere efforts to pick up values of my father and translate his ideals into action," she told *Deccan Chronicle* in an exclusive interview.

In what could be seen as a boost to BJP's efforts to overshadow the Gandhian and Nehruvian principles with those of Bose, Anita said: "Maybe people found my father's image of not being involved in any corruption cases, a common feature in the post-Independence politics, as a relevant point to spread the message of good values among the younger generation."

The plain-speaking economics professor of German-based University of Augspurg expressed her views on transitional economies of the third world, the government's withdrawal from basic social services in India and the need for focussing on achieving total literacy and poverty alleviation.

She is here on a three-day visit— nearly after four decades — to participate in an international conference on Netaji organised by veteran freedom fighters and associates of the founder of the Indian National Army.

Anita Bose, however, did not rule out that the BJP was projecting her father as the icon of national movement out of political opportunism. "The differences in ideology and approach between Gandhi-Nehru duo and my father is another incentive for them," she said.

Anita said her father would have opposed the Partition had he been alive, which according to her, was imposed by British.

*Anita Bose, daughter of Netaji Subash Chandra Bose* ❑ Noah Seelam

**CITY NOTES**

**Ikebana course from Feb 22**

**Hyderabad, Feb. 17:** The School of Gardening of Agri-Horticultural Society, Public Gardens is organising a training course in Ikebana from February 22 to 25. Interested persons can contact Akurati Satyanarayana, joint secretary, Agri-Horticultural Society personally or over phone number 3299779.

**Seminar on skills, attitudes and values**

David Memorial Institute of Management would organise a one-day seminar on 'Skills Attitudes and Values' for 21st century managers at Jehovah Shamma Hall in the college premises in Tarnaka on February 19. Management consultant Sharu S Rangnekar, and director of CORD-M B R Virmani and Tata Consultancy Services regional manager Chandrasekhar would deliver lectures. Registrations could be made over phone number 7016340.

க்கவில்லை. ஏனென்றால், நீ அவற்றை படிப்பதேயில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

"நீ தீவிரமாக இருக்காத வரை, வாசிப்பதில் ஆர்வம் வராது. வியன்னாவில் நீ பல தலைப்பிலான நூல்களை பெற்றிருக்கிறாய். ஆனால், அவற்றை நீ தொடர்ந்து பார்க்கவில்லை என்று எனக்குத் தெரியும்."

இருவரின் அன்பின் விளைவாக 1942 ஆம் ஆண்டு நவம்பர் 29 இல் இவர்களின் மகளான அனிதா பிறந்தாள். இத்தாலியின் புரட்சிகர தலைவர் கேரிபால்டியின் மனைவியான பிரேசிலை பூர்விகமாக கொண்ட அனிதா கேரிபால்டி நினைவாக அந்தப் பெயரிடப்பட்டது.

அனிதா தனது கணவருடன் பல போர்களில் ஈடுபட்டிருந்ததுடன், துணிச்சலான வீரர் என்ற அடையாளத்தை பெற்று விளங்கினார். சுபாஷ் சந்திர போஸ் 1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வியன்னாவிற்கு சென்று எமிலியையும், அனிதாவையும் சந்தித்ததே அவர்களின் கடைசி சந்திப்பாகும்.

ஆனால், சுபாஷ் சந்திர போஸின் நினைவுகளுடன் 1996 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த எமிலி, தங்களது மகள் அனிதா போஸை ஜெர்மனியின் பிரபலமான பொருளாதார வல்லுனராக வளர்த்தெடுத்தார். இந்த கடினமான பயணத்திலும், சுபாஷ் சந்திர போஸின் குடும்பத்திலிருந்து எந்த உதவியும் பெறுவதற்கு அவர் மறுப்பு தெரிவித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

- நன்றி: பி.பி.சி

முதலில் தன்னை மற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதியுடையவன்.
– *சுபாஸ் சந்திரபோஸ்*



# கேள்வி - பதில் 1

## 1. வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்றால் என்ன? யாரால் எப்போது நிறைவேற்றப்பட்டது?

1976 மே 14 அன்று, தந்தை செல்வநாயகம் தலைமையில் அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் வட்டுக்கோட்டை வழகம்பரை அம்மன் கோவிலருகில் ஒன்று கூடி தமிழர்களின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை எடுத்தனர்.

- இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் பாரம்பரிய தாயக பூமி. இந்த மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகமாக அமைக்கப்பட வேண்டும்.
- அதில், ஒரு தேசிய இனமாக தமிழர் தம் அரசியல் இலக்கை தாமே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும்.



- அதற்கான முழு மூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புகளோடு நாம் முன்னெடுக்க வேண்டும்.

என்பனவே இந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கம். தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்பதே

## 2. 13ம் திருத்தச் சட்டம் என்றால் என்ன? யாரால் எப்போது உருவாக்கப்பட்டது?

- தமிழர்களின் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமையை தன்னிச்சையாகக் கையிலெடுத்து, இந்திய அரசும் இலங்கை அரசும் தமக்கிடையில் 1987 ஜூலை 29 அன்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. அதை நடைமுறைப்படுத்தும் நோக்கில், அந்த ஒப்பந்தத்தின் சரத்துகள் இலங்கைப் பாராளுமன்றின் பெரும்பான்மை ஒப்புதலுடன் ஒரு திருத்தச் சட்டமாக இலங்கை அரசியற் சட்டத்தில் இணைக்கப்பட்டது. இதுவே 13ம் திருத்தச் சட்டமாகும்.
- தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யாத இத்திட்டம் தமிழர்கள் மீது நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு திணிக்கப்பட்டது.
- இதன் பிரகாரம், 1987 நவம்பர் 14 அன்று, மாகாணசபை முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் வடக்கு கிழக்கிற்கு தனித்தனியான மாகாணசபைகள் இருக்கும் என்றும் அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- மாகாண சபைகளுக்கு விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்புத் திட்டம், உள்ளூராட்சி, போக்குவரத்து, சமுகசேவை போன்ற அதிகாரங்களுடன் பொலிஸ், காணி அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் இன்றுவரை காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்படவில்லை. கல்வி, சுகாதாரம், விவசாய அதிகாரங்கள் கூடமாகாண சபையிலுள்ள ஒத்திசைவுப் பட்டியலின் மூலம் மத்திய அரசின் மறைமுகக் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.



- மொத்தத்தில், இலங்கை - இந்திய அரசுகளின் அபிலாசைகளை மட்டுமே பூர்த்தி செய்யும் ஒரு திருத்தச் சட்டமாகவே இன்றுவரை உள்ளது. அது மட்டுமல்லாமல், திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது, தமிழர் பூர்வீக நிலத்தில் சிறிலங்கா அரசின் அத்துமீறிய குடியேற்றங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது.

# பெரு நாட்டில் ஒரு விடுதலைப் போராட்டம்

ஒரு விடுதலைப்போராட்டத்தின் மூளையாகவும் மையக் கருப் பொருளாகவும், இயங்கு சக்தியாகவும் செயற்படுவது அது வகுத்துள்ள மூலோபாயம். அந்த தாரக மந்திரம், அது பாதுகாக்கப்பட்டு சந்ததி வழியாக ஊடு கடத்தப்படுமானால், இலக்கை அடைவதை எந்த வல்லாதிக்க சக்தியாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது!!

பெரு நாட்டின் 'ஒளிரும் பாதை' இயக்கம் பற்றி இன்றைய இளம் தலைமுறையினருக்கு அதிகம் தெரியாமலிருக்கலாம். ஒரு காலத்தில் புரட்சியை நோக்கி வெற்றிநடை போட்ட, பெரு கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) யின் ஆயுதமேந்திய வடிவமே ஒளிரும் பாதையாகும். லத்தீன் அமெரிக்க கண்டத்தில் அமெரிக்காவின் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தது இந்த இயக்கம்.

தலைவர் அபிமால் குஜ்மான் (இயக்கப் பெயர்: கொன்சலோ) தலைமையில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதமேந்தினர். தலைநகர் லீமா, அடுத்தடுத்து இடம்பெற்ற கார் குண்டுவெடிப்புகளால் அதிர்ந்தது. அதுவே அமெரிக்கா, ஒளிரும் பாதையை ஒரு காலத்தில் உலகின் சக்திவாய்ந்த பயங்கரவாத இயக்கமாக காட்ட காரணமாயிற்று.







எண்பதுகளில் அந்த இயக்கத்தின் ஆயுதப்போராட்டம் தீவிரமடைந்திருந்த காலத்தில், ஒரு கட்டத்தில், மாவோயிஸ்ட் புரட்சி வென்று, விரைவில் ஆட்சியைப் பிடித்துவிடுவார்களோ என்று சி.ஐ.ஏ. மட்டத்தில் கூட ஐயம் நிலவியது.


பெருவின் அன்றைய சர்வாதிகாரி புஜிமோரிக்கு அமெரிக்கா தேவைப்பட்ட உதவிகளை வழங்கி ஒளிரும் பாதையை அழித்தொழிக்க ஆரம்பித்தது. அரச இராணுவ நடவடிக்கையால் மட்டுமல்ல, எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கு (சாதாரண விவசாயிகளும் அதற்குள் அடக்கம்) ஆயுதங்கள் வழங்கியும் இதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஒளிரும் பாதை போராளிகள், ஆதரவாளர்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். இறுதியில் இயக்கத் தலைவர் கொன்சலோ கைது

செய்யப்பட்ட பின்னர், அந்த இயக்கத்தின் பலம் பெருமளவில் குறைந்து விட்டது. அதற்குப் பிறகு தலைமைப் பொறுப்பேற்ற முக்கிய தலைவர்கள் ஒன்றில் கைது செய்யப்பட்டோ அல்லது சண்டையில் கொல்லப்பட்டு விட்டனர்.

தற்போது எஞ்சியிருக்கும் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் (அவரைப் பற்றிய விபரங்கள் குறைவு), அரச கட்டுப்பாடற்ற அமேசன் காட்டுப் பகுதியில் எஞ்சிய போராளிகளை வழிநடாத்தி வருகிறார். கடந்த பத்தாண்டுகளாக ஒளிரும்பாதை, தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் (பெருமளவு வனாந்தரப் பகுதிகள்), தன்னை மீளக் கட்டமைத்து வந்தது. அந்தப்பகுதியில் (கோகெயின் போதைப்பொருளின் மூலப்பொருளான) கொக்கோ பயிர் செய்யப்படுவதாகவும், அதைப்பயிரிடும் விவசாயிகளுக்கும், அதை கடத்தும் வியாபாரிகளுக்கும் பாதுகாப்பு கொடுத்து, வரி அறவிட்டு வருவதாகவும், அதுவே ஒளிரும் பாதை இயக்கத்தின் பிரதான வருமானம் என்று பெரு அரசாங்கமும், அமெரிக்காவும் கூறி வருகின்றன. ஆனால் அதற்கான எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை.

உலகெங்கும் "கம்யூனிசம் காலாவதியான சித்தாந்தமாகி விட்டதால்" மக்கள் ஆதரவும் கிட்டாது, அதனால் பெருவில் ஒளிரும் பாதை மாவோயிஸ்டுகளின் கதை முடிந்து விட்டது, என்று தான் பலர் நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களின் நம்பிக்கையை பொய்யாக்கும் விதமாக ஒளிரும் பாதை கெரில்லாக்கள் மீண்டும் இராணுவ இலக்குகளை தாக்கத் தொடங்கியுள்ளனர். அண்மையில் கூட (ஒக்டோபர் 2008), பிரபலமான புரட்சியின் மையமான "ஆயாகுச்சோ" பிரதேசத்திற்கு அருகில், அரச இராணுவத் தொடரணி மீது இடம்பெற்ற அதிரடித் தாக்குதலில், 12 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.






"ஆயாகுச்சோ" சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம் என்பது குறிப்பித்தக்கது. பூர்வீக செவ்விந்தியக் குடிகள் வாழும் மலைப்பிரதேசமான ஆயகுச்சோவில் இருந்து தான் ஒளிரும் பாதை இயக்கத்தினர் தமது புரட்சியை ஆரம்பித்தனர். இப்போது கூட அந்தப் பகுதி மக்கள் யாவரும், ஒளிரும் பாதையின் தீவிர ஆதரவாளர்கள். மேலும் பெரு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

'ஒளிரும் பாதை புரட்சி' ஆரம்பமாகும் முன்னர் பெருவின் சனத்தொகையில் பத்து வீதமானோர், அந்நாட்டின் என்பது வீதமான நிலங்களை சொந்தமாகக் கொண்டிருந்தனர். சனத்தொகையில் அரைவாசி பேர் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்ந்தனர். இன்று 'ஒளிரும் பாதை அழிக்கப்பட்டு', 'கம்யூனிசம் காலாவதியான' காலத்திலும், நிலைமை இன்னும் மாறவில்லை.

இதற்கிடையே பிரிட்டனின் "சேனல் 4" தொலைக்காட்சி சேவை செய்தியாளர் ஒருவர் பெரு சென்று, பல சிரமங்களுக்கு மத்தியில், ஒளிரும் பாதை இயக்கத்தின் இன்றைய நிலையை படம்பிடித்து அனுப்பியுள்ளார். சில வருடங்களுக்கு முன்னர் ஒளிபரப்பான அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி, இதுவரை வெளியுலகம் பார்க்காத அரிய படங்களையும், தகவல்களையும் திரட்டித் தருகின்றது. பல மறைக்கப்பட்ட உண்மைகளை இந்த ஆவணப்படம் வெளிக்கொணர்கின்றது.

பூர்வீக மக்கள் மத்தியில் தற்போதும் ஒளிரும் பாதை இயங்கி வருகின்றது. அது மட்டுமல்ல, பெருமளவில் கைது செய்யப்பட்டு தற்போது சிறைவாசம் அனுபவிக்கும் முன்னாள் போராளிகள் கூட, சிறைக்குள்ளே தமது புரட்சிகர அரசியலை தொடர்கின்றனர். சிறைச்சாலையில் வைத்து பூட்டிய போதும், ஒளிரும்பாதை உறுப்பினர்களின் கொள் கைப்பற்றை உடைக்க முடியாத அரச படைகள், சிறைக்கலகத்தை அடக்குவதாக சொல்லி, நூற்றுக்கணக்கான கைதிகளை கொன்று குவித்தனர். இவையெல்லாம் இந்த ஆவணப்படத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

# எல்லாமே மாறிப்போச்சு!

சிறுகதை

பதின்நாலு வருசத்துக்குப் பிறகு யாழ்ப்பாணத் திலை கால் வைக்கப்போறன் எண்ட நினைப்பிலை-யோ என்னவோ.. ஒருக்காக் கூட எனக்கு நித்திரை வரேல்லை.

இன்னும் கொஞ்ச நேரத்திலை விடிஞ்சிடும். எப்பி டியும் பத்து மணிக்குள்ளை வசாவிளானுக்குப் போயிடலாம்.

.. இப்ப ஊருக்குப் போக வேண்டாமெண்டு மனி சனும் பிள்ளையளும் மறிக்க மறிக்க ஏதோ ஒரு பிடிவாதத்திலை வெளிக்கிட்டு வந்திட்டன். கொஞ்சம் ஒரு யோசனையாத்தான் இருக்கு.

அட, அப்பிடி என்னதான் நடந்திடப் போகுது.? கடைசிச் சண்டை எண்டு எங்கடை சனத்தை ஆயிரக்கணக்கிலை அவங்கள் கொண்டு குவி ச்சு.. அதுகும் பத்து வருசத்துக்கு மேலை ஆகிப் போச்சு.. இதுக்கு மேலை என்ன இனி?.

ஆக மிஞ்சிப் போனா சின்னம்மா அங்கைதானை இருக்கிறா.. என்ன பயம்?

.. எங்கடை இடத்திலை இப்ப ஆமி இல்லையெண்டு அறிஞ்ச பிறகு, ஒருக்கா ஊருக்குப் போட்டு வரவேணுமெண்ட ஆசையை என்னாலை கட்டுப்படுத்த முடியேல்லை.

எங்கடை ஊரைப் பற்றியும் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றியும் என்ரை பிள்ளையளுக்குத் தெரியாது. சொன்னாலும் அவை சிரிப்பினம். அங்கை பிறந்து வளர்ந்தவைக்குத் தான் அந்த அருமை தெரியும்.

“கனகராயன் குளம்! ஆராவது இருக்கா.?”

கனபேர் நித்திரை. கொஞ்சப் பேர் அரைகுறை நித்திரை. திரும்பவும் கண்டக்டர் குரல் எழுப்பி னார்.

“கனகராயன் குளம்! ஆராவது இறங்க இருந்தா இறங்குங்கோ. இனி முறுகண்டிலதான் பஸ் நிக் கும்.. இடையிலை நிக்காது.”



.. ஒருத்தரும் இறங்கேல்லை.. முறுகண்டி கிட்ட வந்திட்டுதா?

சின்ன வயசில எத்தினை தரம் அம்மா அப்பாவோடை வவுனியாவுக்கும் கொழும்புக்கும் போய் வந்திருக்கிறம்.. எல்லாம் கண்ணுக்கை தெரியிற மாதிரிக் கிடக்கு.

போகேக்கையும் திரும்பி வரேக்கையும் எப்படா முறுகண்டி வரும். பஸ் நிப்பாட்டும்.. எண்டு, தம்பியும் நானும் அந்தக் கச்சான் கடலையைக் கொறிக்கிற நினைவோடை இருக்கிறதை நினைச்சா இப்பவும் சிரிப்பா இருக்கு. ஆனா, அதையும் தாண்டி ஒரு கவலையும் வருகுது.. ஏனெண்டுதான் விளங் கேல்லை.

நானறிஞ்ச காலம் தொட்டு இந்தக் கண்டி வீதி யாலை போறவாற எந்த வாகனமும் முறுகண்டிப் பிள்ளையாற்றை வாசல்லை நிப்பாட்டி, ஒருக்கா அவரைக் கும்பிடாமல் போனதில்லை. புதுமையான கடவுளெண்டு எல்லாருக்கும் அப்பிடியொரு நம்பி-க்கை, பக்தி. முஸ்லீம்கள், வேதக்காரர், ஆரெண்-டில்லை. கும்பிட்டுத்தான் போவினம். ஏன் இந்தச் சிங்களவங்கள்கூட வாகனங்களை நிப்பாட்டி இறங்கி, ‘கணபதி தெய்யோ’ எண்டு சொல்லிக் கும்பிட்டவை தானே?

றோட்டுக் கரையிலை குடிசைபோலை ஓலைக் கூரை போட்ட ஒரு சின்னக் கோயில்தான். எப்ப பாத்தாலும் ரெண்டு பக்கமும் கரையில அடுக்கடுக்காய் வாகனங்கள் நிப்பாட்டி இருக்கும்.. சனக் கூட்டத்தில பிள்ளையார் வாசல்களை கட்டிக் கிடக்கும்.

கோயிலுக்கு எதிரை கொஞ்சம் தள்ளி றோட்டுக் கரையிலை இருக்கிற பெரிய தண்ணித் தொட்டியிலை எல்லாரும் முகம் கை கால் கழுவி, பிள்ளையார் வாசலுக்குப் போவம். வாசல்லை நட்டிருக்கிற கற்பூரச் சட்டியிலை சுவாலை விட்டு எரிஞ்சு கொண்டிருக்கிற தீபத்திலையிருந்து வாற கற்பூர வாசம் நல்லா இருக்கும்.. அதுக்குப் பக்கத்திலை ஒரு சீமெந்துத் தொட்டிக்குள்ளை சனங்கள் சிதறு தேங்காய் அடிக்கிற சத்தம் இடைவிடாமல் கேக்கும். பிள்ளையாரைக் கும்பிட்டு சுத்தி வர, இடது பக்க முகப்பிலை ஒரு சந்தணக் கல்லு இருக்கும். அப்பா சந்தணக்கட்டையாலை அரைச்சு, எனக்கும் தம்பிக்கும் பொட்டு வைச்சு தானும் வைப்பார். அம்மாவும் அதிலை தொட்டுப் பொட்டு வைப்பா.

ஐயர் தீபம் காட்டேக்கை எல்லாரும் அரோஹரா எண்டு உரக்கச் சொல்லிக் கும்பிடுவினம். அம்மாக்களும் அதுபோலை சொல்லிக் கண் கலங்கிக் கும்பிடுவினம். அதைப் பாக்க எனக்குள்ளையும் ஏதோ ஒருவித உணர்வு வரும். இப்ப நினைச்சுப் பாக்க... அதுதான் ‘பக்தி’ எண்டு விளங்குது. கடவுளே.

கும்பிட்டு முடிய அப்பா எங்களைக் கடைப்பக்கம் கூட்டிக் கொண்டு போவார். தம்பிக்கும் எனக்கும் அந்த நேரம் சந்தோசம் தாங்கேலாமை இருக்கும்!

நல்ல ருசியான வடை.. பிளெயின் ரீ. எல்லாம் முடிய வறுத்த கச்சான் கடலை!






விளிம்பு வைச்ச வட்டமான பெரிய கூடையளிலை கச்சான் குவிந்திருக்கும்.. வரிசையா நிறையப் பேர்.. அனேகமா பெம்பிளையள் தான்.. வயசு போன அம்மாக்களும் பெரிய பெரிய காதுக் கடுக்கனுகளோடை இருப்பினம்.

சத்தியமாச் சொல்லுவன் இண்டு வரைக்கும் வேறை எந்த இடத்திலயும் அந்த முறுகண்டிக் கச்சான் போலை நான் காணவுமில்லை சாப்பிடவுமில்லை. ஒவ்வொரு கச்சானும் நாங்கள் நல்லூர்த் திருவிழாவிலை வாங்கிற கச்சானை விட இரண்டு மடங்கு பெருசா நீளமா இருக்கும். நாலு பருப்பு அல்லது சில வேளையளில அஞ்சு பருப்பும் உள்ளுக்கு இருக்கும்.. நல்ல பதமா வறுபட்டு.. அந்தச் சிவப்புத் தோலை நீக்கிப் பார்த்தா.. ஒவ்வொரு பருப்பும் மெல்லிய பிறவுண் நிறத்திலை மொறு மொறு எண்டிருக்கும்.. நினைக்க ஆசையாய் இருக்கு.. எவ்வளவு காலம். இந்த வயசுக்குப் பிறகும் அந்தக் கச்சான் ஆசை அப்பிடியே இருக்கு..

பல பல எண்டு விடியுது. முறுகண்டிக்குக் கிட்ட வந்திட்டமெண்டு நினைக்கிறன்..

கோயில்... தண்ணித் தொட்டி.. கற்பூரச் சட்டி.. சிதறு தேங்காய்.. சந்தணக் கல்லு.. தேத்தண்ணிக் கடையள்.. கச்சான் யாபாரம்.. இதெல்லாம் இப்பவும் அதேபோலை இருக்குமோ? அல்லது எல்லாமே வித்தியாசமாய் இருக்குமோ?

பஸ் மெதுமெதுவாக ஓடி ஒரு கரையில நிப்பாட்டுது. முறுகண்டியானே.. எத்தினை வருசத்துக்குப் பிறகு உன்ரை வாசலுக்கு வாறன். ஊரிலை எங்கடை வீடு, நான் விளையாடித் திரிஞ்ச இடங்கள், என்ரை பள்ளிக்கூடம் எல்லாத்தையும் பாத்து.. தெரிஞ்சவை எல்லாரையும் சந்திச்சு மனம் விட்டுக்



கதைச்சு.. எல்லாம் முடிய ஒரு பிரச்சனையுமில்லாமை சுகமா நான் லண்டன் திரும்பிறதுக்கு நீதான் துணை நிக்க வேணும்.

கற்பூரம் கொழுத்தி சிதறு தேங்காய் அடிச்சு.. உண்டியலுக்கை காசு போடுவனப்பு. சாமீ.

நல்லா விடிஞ்சிட்டுது. இதென்ன பஸ் வேறை இடத்தில நிப்பாட்டியிருக்கு.கோயிலையும் தெரியேல்லை..

என்னடா இது? எங்கை நிக்கிறம்? நாலைஞ்சு பேர் மட்டும் இறங்க மற்றவை அப்பிடியே இருக்கினம். திகைப்பாய் இருக்கு..

“சாமி கும்பிடுற ஆக்கள் கெதியாய் போட்டு வாங்கோ. பத்து நிமிசம்தான் பஸ் நிக்கும்.”

கண்டக்டர் ஏன் இப்பிடிச் சொல்லுறார்? எல்லாரும் தானே கும்பிடுறவை? இது முறுகண்டியா வேறை இடமா?

பக்கத்தில இருந்த அம்மாட்டைக் கேட்டன். “ஏனம்மா கனபேர் இறங்காமை இருக்கினம்?”

“நீங்கள் வெளி நாட்டிலயிருந்து வாறியளே..?” எண்டு அவ கேட்டா. “ஓம்” என்றேன்.

“இப்ப எல்லாம் வேற மாதிரி.. கோயில் வாசலாலை பஸ்கள்.. வாகனங்கள் போறேல்லை. சுத்துப் பாதையாலை தான் வரும். இறங்கி கொஞ்சத்தூரம் நடக்க வேணும். எல்லா பஸ்களும் நிக்காது. சில பஸ் மட்டும்தான் நிக்கும். கொஞ்ச நேரத்தில வெளிக்கிட்டிடும். அதாலை சிலபேர் மட்டும்தான் சுத்தி நடந்து போய் கும்பிட்டு வருவினம்.

“ஓ... அப்ப நீங்கள் இறங்கேல்லையே.? நான் ஒருக்காப் போட்டு வாறன். நான் வாறதுக்கிடையில பஸ் வெளிக்கிட்டா ஒருக்கா மறிச்சு வையுங்கோ. ப்ளீஸ்”

சுத்துப் பாதையில கொஞ்சத்தூரம் நடக்க, கோயில் தெரியுது.. முந்தின கூரை இல்லை. ஓடு போட்டிருக்கு. றோட்டுக் கரையை அடைச்சுக் கொண்டு வரிசையா நிக்கிற வாகனங்களுமில்லை. கூட்டமாய் நிண்டு கும்பிடுற சனங்களையும் காணேல்லை.

கவலையாக் கிடக்கு. எவ்வளவு பரிமளிப்பாய் இருக்கிற இடம் இப்பிடி வெறிச்சோடிக் கிடக்கு. வருசக் கணக்காய் இருந்த நடைமுறையை மாத்தி இப்ப என்ன புதுசாய் இப்பிடியொரு முறை? இதெல்லாம் ஆற்றை வேலை..? முறுகண்டியானே!. இதெல்லாம் என்னையா.? மனதுக்குள்ள ஏதோ பாரமாய் இருக்கு.

இடம் மாறிக் கிடந்த தண்ணித் தொட்டியைத் தேடி கைகால் கழுவி பிள்ளையாற்ற வாசலில வந்து நிக்க, தனிச்சு விடப்பட்ட மாதிரி ஒரு உணர்விலை ஒரு நாளும் இல்லாத மாதிரி எனக்குக் கண் கலங்குது.

முந்தின ஞாபகம் வருகுது. அம்மா, அப்பா, தம்பி எல்லாரையும் நினைக்கிறன்.

சுத்திக் கும்பிட்டு, உண்டியலில காசைப் போட்டிட்டுத் திரும்ப –

“அம்மா..! பூ..!” எண்ட குரல் கேக்குது.

அஞ்சாறு சின்னப் பையளில பூ வித்துக் கொண்டிருந்தா அந்தப் பிள்ளை. முப்பது முப்பத்தைஞ்சு வயசு தானிருக்கும். முகம் வாடிப்போய்க் கிடந்தது.

அந்த முகம்? இந்தப் பிள்ளையை நான் பாத்தி ருக்கிறன். இடது கன்னத்தில சின்ன வண்டு போலை அந்தக் கறுப்பு மச்சம்.. ரெண்டு பின்னல் பின்னி குறுக்கை வளைச்சுக் கட்டினபடி கையில துவக்கும் வைச்சுக் கொண்டு நிக்கிற இயக்கப் பிள்ளையளுக்கை இவவின்ரை சிரிப்பு புறம்பாய்த் தெரியும்.

ரெண்டு மூண்டு தரம் எங்கடை வீட்டுக்கு வேற பிள்ளையளும் இவவுமாய் வந்திருக்கினம்.. பேர் கூட ஞாபகமிருக்கு, நிலமகள்..

போன மாதம் யாழப்பாணம் வந்திட்டுத் திரும்பிய கமலாக்கா சொன்னது டக் எண்டு நினைவுக்கு வருகுது..

"…. இயக்கத்தில இருந்த பிள்ளையளும் சண்டை யில மனிசன்மாரை இழந்தவையும் இப்ப வாழ வழி தெரியாமைத் தவிக்குதுகள். நாட்டுக்கா கப் போராடப் போனதுகள். இப்ப சாப்பாட்டுக்கே வழியில்லாமை நிக்குதுகள். பெரிய கொடுமை என்னெண்டா இயக்கத்தில இருந்தவையை எங்-கடை சனங்களும் இப்ப மதிக்கிறதில்லை.. ஏதோ குற்றவாளியளைப் போலப் பாக்கினம்."

ஒரு காலத்திலை இயக்கமெண்டா எங்கடை சனம் எவ்வளவு மதிப்பு வைச்சிருந்துது. றோட்டிலை இயக்கம் நிக்கிறதைக் கேள்விப்பட்டா அதைப் பாக்கிறதுக்காகவே சனம் கூடிவிடும்.

"அம்மா..! பூ?" மீண்டும் கேட்ட அந்தக் குரல் என்னைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது.

எனக்கு வயசு போனதாலை அவ என்னை அடை யாளம் கண்டிருக்க மாட்டா. நானும் தெரிஞ்ச மாதி ரிக் காட்டிக் கொள்ளேல்லை.

"அம்மா! பூ…?" திரும்பவும் கேட்ட அந்தக் குரல் என்னை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

"ஒரு பக்கற் எவ்வளவு.?"

"முப்பது ரூபா."

ரெண்டு பக்கற்றை வாங்கிக் கொண்டு நூறு ரூபாயைக் கொடுத்தன்..

"மிச்சத்தை நீங்களே வைச்சிருங்கோ..!"

ஐயரிட்டைப் பூவைக் குடுத்திட்டு, பஸ் வெளிக்கி ட்டிடும் என்ற அவதியில அவசரம் அவசரமாய் நடக்க, அந்தப் பிள்ளை என்னைக் கூப்பிட்டுக் கொண்டு பின்னாலை ஓடி வந்தா.

"இந்தாங்கோ.. மிச்சக் காசு" எண்டு சொல்லி நாற்-பது ரூபாயைத் தந்தது.

"பரவயில்லை. நீங்களே வைச்சிருங்கோ"

"இல்லையம்மா. ரெண்டு பக்கற் அறுபது ரூபா. அதுக்கு மேலை எனக்கு வேண்டாம். நன்றி!" எண்டு சொல்லி அந்தக் காசை என்ரை கையிலை வைச்



சிட்டுத் திரும்பிப் போகுது.

இந்தப் பிள்ளை நிலமகள்தான்., சந்தேகமே இல்லை.

கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு எல்லாம் தாண்டி சாவகச்சேரியிலை பஸ் போய்க் கொண்-டிருக்கு.

ஊருக்குக் கிட்ட வந்தாச்சு எண்ட சந்தோசத் தைக் காணேல்லை. அது எங்கையோ துலைஞ்சு போச்சு.. மனம் இருண்டு போய்க் கிடக்கு.

ஊரிலையும் இன்னும் இப்பிடி என்னத்தைப் பாக்கப் போறனோ? வேண்டாமெண்டு சொல்லச் சொல்லக் கேக்காமை வெளிக்கிட்டு வந்தது பிழையோ எண்டு இப்ப மனம் அங்கலாய்க்குது.

கடவுளே! எங்கடை நாட்டுக்கு என்ன நடந்தது? எப்பிடி இருந்த இடம் எல்லாம் தலைகீழா மாறிப் போய்…

ஏனிப்பிடி?

நினைக்க நினைக்க தாங்கேலாமை இருக்கு..

பூ வித்துக் கொண்டிருந்த அந்தப் பிள்ளையின்ரை முகமும் மாறிப் போன சனங்களும்.. வெறிச்சோடிக் கிடக்கிற முறுகண்டியான்ரை வாசலும்… மாறி மாறி நினைவிலை வந்து அலைக்கழிக்குது.

என்னாலை தாங்க முடியேல்லை.

ஓவெண்டு குரலெடுத்துக் கத்தி அழவேணும் போல இருக்கு.


என்னை நானே கட்டுப் படுத்திக் கொள்ள…. கண்ணீர் வழிஞ்சோடுது.

– அஜந்தி

# கொழும்பு துறைமுகநகர் பார்வைக் கட்டணம்







கொழும்பு துறைமுக நகர் மக்கள் பார்வைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த 10.01.22 அன்று திறந்து விடப்பட்ட துறைமுக நகரைப் பார்வை யிடுவதற்கான கட்டண விபரம் இப்போது வெளி வந்துள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவமும் வெளி யிடப் பட்டுள்ளது.

புகைப்படம் மற்றும் காணொளி எடுப்பதற்கான படிவம் தனிநபர் மற்றும் வணிகம் என்று இரு பிரிவுக ளாக இருப்பதுடன், 1-3 மணித்தியாலங்களுக்கு 1-5 வரையான தனிநபருக்கு 30,000 ரூபாய்களும், 6-10 வரையானவர்களுக்கு 50,000 ரூபாய்களும், வணிக ரீதியில் செல்லும் பத்திற்குக் குறைவானவர் களுக்கு ரூபா 1,00,000 என்றும் மேலதிகமானோர் க்கு கட்டணம் இன்னும் அதிகரிக்கும் என்றும் கூறப் பட்டுள்ளது.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் கட்டணப் பணம் கொழும்பிலுள்ள சீன வங்கிக்கு (Bank of China) நேரடியாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதுதான்.

# தங்கப் பதக்கம் வென்ற இந்துகாதேவி







பாக்கிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் வசி த்துவரும் இந்துகாதேவி கணேஷ் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைக் காத நிலையிலும் தன்னுடைய முயற்சியி-னால் இந்த சாதனையைச் செய்த இந்த யுவதி க்கும், வறுமை நிலையிலும், கணவனை இழந்து தனித்திருந்தாலும் தனது மகளை சாத னையாளராக வளர்த்துவிட்ட தாய்க்கும் எமது வாழ்த்துகள். பொது அமைப்புகளின் உதவி யுடன் மட்டுமே சாதனையாளராக இருக்கும் இந்த வீராங்கனைக்கான பொருளாதார வசதி களை உருவாக்கிக் கொடுப்பது எங்களின் தலையாய கடமையாகும்.

# மீண்டும் வருமா...?

பசுமையான நினைவுகள்
நினைவுகளின் சுமைகள்
ஊமை கண்ட கனவாக
உள்ளத்தின் ஓரத்தில்...

மீண்டும் வருமா–அந்த
அழகிய காலங்கள்?
கிராமத்தின் எழிலாக
இயற்கையன்னை.
பசுமையுடன்
செம்மண் வீதியில்
தடம்பதித்து
காட்டுக் கனிகளை
தாம் புசித்து
தோழர் தோழிகள்
நாமங்கே
செய்த குறும்புகள்
ஆயிரமே!
மழைகாலம்
வந்துவிட்டால்
ஆனந்தமாக
அனுபவிப்போம்.
மழையில் நனைந்து
பாடிஆடும் அனுபவம்
எத்தனை ஜென்மம்
எடுத்தாலும்
இயம்பிட வார்த்தை
தானேது !!

குளத்து மதவின்
மேல் நின்று
குதித்து நீரில்
நீச்சலடித்து
குதூகலமாக
வாழ்ந்த காலங்கள்
மீண்டும் வருமா ?

அன்று எம்முடன்
ஒன்றாய் வாழ்ந்த
நட்புகளில் தமிழீழ
விடுதலை வேண்டி
வீரமரணமடைந்தோரும்
காணாமல் போன உறவுகளுமாய்
நினைவுகளின் சுமைகள்
நிரந்தரமாகி போக
அந்நிய மண்ணில் இன்று
அகதியாக வாழ்க்கை!
எத்தனை வசதிகள்
வாய்ப்புகள் வரினும்
சொந்த மண்ணில்
சுதந்திரமாக
வாழும் காலம் வருமா?
ஏக்கமுடன் நான்
காத்திருக்கிறேன்

–பவானி

# தமிழ் மரபுத் திங்கள்



எழுநிலம்